











# கார்த்திகேய சிவசேனாபதி

மாநிலச் செயலாளர்

கழக சுற்றுச்சூழல் அணி

www.dmkenvironmentwing.org

www.karthikeyasivasenapathy.in



2020 2025





1

கழக சட்டதிட்ட விதி : 31 ன்படி

"சுற்றுச்சூழல் அணி" புதியதாக உருவாக்கப்பட்டு

அதன் மாநிலச் செயலாளராக **திரு. கார்த்திகேய சேனாபதி** அவர்கள் நியமனம்.

**தலைமைக் கழக அறிவிப்பு**

கழக சட்டதிட்டத்தில் கழகத் துணை அமைப்புகள், சார்பு மன்றங்கள் தலைப்பிலான விதி: 31 – பிரிவு 19ன்படி;

"தி.மு.க. சுற்றுச்சூழல் அணி" எனும் புதிய துணை அமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் மாநிலச் செயலாளராக திரு. **கார்த்திகேய சேனாபதி** அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார். ஏனைய நிர்வாகிகள் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 600 018,
நாள் : 23–11–2020.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.









**நாள்: 23.11.2020 :** 23-11-2020 அன்று, இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் முதல்முறையாக சுற்றுச்சூழலுக்கான ஒரு சிறப்பான அணியை அமைத்து, அந்த அணிக்கு செயலாளராக என்னை நியமித்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கும் வண்ணம் கங்கேயம் பூச்சிக் காளையின் படத்தை பரிசாக வழங்கினேன்.



















தினகரன் 3/10

தமிழர்களின் சுற்றுச்சூழல் அறிவு

## தொல்காப்பியம், திருக்குறளில் வெளிப்படுகிறது

**தி.மு.க. சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் தகவல்**

காங்கயம், நவ.25: "தமிழர்களின் சுற்றுச்சூழல் அறிவு தொல்காப்பியம், சங்க இலக்கியம் மற்றும் திருக்குறளில் வெளிப்படுகிறது" என தி.மு.க. சுற்றுச்சூழல் பாதுகாப்பு அணி மாநிலசெயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. தலைவர் இந்திய நாட்டிலேயே முதன் முறையாக சுற்றுச்சூழலுக்காக ஒரு தனி அணியை உருவாக்கிநமக்கெல்லாம் சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை மிக தெளிவாக காண்பித்துள்ளார். பல்லாயிரம் வருடங்களாக தமிழர்கள் சுற்றுச்சூழலைப் பேணி பாதுகாத்து அதனோடு இணைந்த வாழ்வியல் முறையைக் கொண்டவர்கள். குறிப்பாக, தொல்காப்பியத்தில் திணைகளை பற்றிய விளக்கம் சான்றுகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழர்களுடைய சுற்றுச்சூழல் அறிவு தொல்காப்பியம் தொடர்ந்து சங்க இலக்கியத்திலும், திருக்குறளிலும் வெளிப்படுகிறது.

ஏன் சுற்றுச்சூழலைப் பேணி பாதுகாக்கவேண்டும், நீராதாரங்களையும், மழைநீர் சேகரிப்பையும் உருவாக்கவேண்டும் என விளக்குகிறது. பெரும் முதலாளிகளுக்காக சுற்றுச்சூழல் சட்டங்களை மாற்றி சுற்றுச்சூழலுக்கும், அதனால் சாமானிய மக்களுக்கும் நேரக்கூடிய அழிவு மிகவும் ஆபத்தானது என்பதை உணர்ந்த வகையிலே திராவிட முன்னேற்ற கழகமும், தலைவர் மு.க.ஸ்டாலினும் சுற்றுச்சூழலுக்கு என ஒரு அணியை உருவாக்கி உள்ளனர்.

சுற்றுச்சூழல், நீராதாரங்கள் மேம்பாடு, மரம் வளர்ப்பு, என இயற்கையின் மீது அளப்பறிய ஆர்வம் கொண்ட அனைவரும் தி.மு.க.வுடன் இணைந்து சுற்றுச்சூழல் அமைப்பின் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஒன்றிணைவோம்.

100 வருடங்களுக்கு முன்பு திராவிட இயக்கம் எப்படி சமூக நீதி, கல்வி, பொருளாதார மேம்பாடு போன்றவற்றை எல்லாம் தமிழக மக்களுக்கு தேவை என்று உணர்ந்து பணியாற்றியதோ, அதேபோல் இன்றைய காலத்திற்கு ஏற்ப தேவையான முன்னெடுப்புகளை எடுப்பதற்கு இந்திய நாட்டிலேயே உள்ள ஒரே இயக்கம் தி.மு.க. என்பதை மறுபடியும் தலைவர் நிருபித்திருக்கிறார்.

இந்திய நாட்டிலேயே சுற்றுச்சூழலுக்கு என தனியாக ஒரு அமைப்பை உருவாக்கிய தி.மு.க.வின் தொலைநோக்குப் பார்வை நாட்டு நலனின் மீதுள்ள அக்கறையை காட்டுகிறது. இவ்வாறு கார்த்திகேய சிவசேனாதிபதி தெரிவித்துள்ளார்.



# 17 December 2020

























2021 தேர்தலை எதிர்கொள்ளும் விதமாக, தலைவர் மாண்புமிகு முதலவர் அவர்களின் அறிவுரையின் பேரில் நடைபெற்ற ‘விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்‘ நிகழ்வில் பங்கேற்று, 75 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற பிரச்சாரங்களில் மக்களிடம் நேரடியாகச் சென்று, ‘திராவிட மாடல் அரசு என் தேவை‘ என்று முழங்கினோம்.






விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல் சுற்றுப்பயணத்தில் செட்டியக்காபாளையம் பகுதியில் தென்னை நார் மற்றும் சார்பு பொருட்கள் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடலில் கலந்து கொண்டோம்.



ஸ்டாலினின்
நாள் : 11.12.2020










# "விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்"



கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி திருப்பூர் தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம் கெடிமேடு அருள்ஜோதி திருமண மண்டபத்தில் விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல் என்ற தேர்தல் பரப்புரையில் கால்நடை வளர்ப்போர் மற்றும் ரேக்ளா பந்தய ஆர்வலர்களுடன் கழக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி கலந்துரையாடினார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ராஜமாணிக்கம், முபாரக் அலி, செ.வேலுச்சாமி, க.சாமி, கே.கதிரேசன், தொண்டாமுத்தூர் ஊராட்சி தலைவர் ஜி.கதிர்வேல், உடுமலை நகர செயலாளர் எம்.மத்தீன், பொதுக்குழு உறுப்பினர்கள் மு.க.முத்து, இ.சி.ஆர்.ரவி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், ஊராட்சி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





























ஸ்டாலினின் குரல்







தினகரன் 2/4

**14** • கோவை 3.2.2020

## பெரியாரை பற்றி அறிந்து கொள்ளுங்கள்

# நடிகர் ரஜினிக்கு புத்தகங்கள் அனுப்பிய காங்கயம் விவசாயி



▸ நடிகர் ரஜினிக்கு பெரியாரை பற்றிய புத்தகங்கள் அனுப்பிய கார்த்திகேய சேனாபதி.

காங்கயம்,பிப்.3:பெரியாரை பற்றிபடித்துஅறிந்துகொள்ளுங்கள் என நடிகர் ரஜினிக்கு காங்கயத்தை விவசாயி ஒருவர் தபால் மூலம் புத்தகங்கள் அனுப்பிவைத்துள்ளார்.

சென்னையில் நடந்த விழாவில் நடிகர் ரஜினிகாந்த் பேசியது, தமிழகம் முழுவதும் விவாதத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில், கடந்த இருநாட்களுக்குமுன் திருப்பூர் மாவட்டம் காங்கயம் அடுத்த குட்டப்பாளையம் பகுதியை சேர்ந்த விவசாயி கார்த்திகேயசேனாபதி(50), நடிகர் ரஜினிகாந்த்துக்கு நீண்ட ஒரு கடிதத்தினை எழுதி, பெரியார் புத்தகத்தையும் அனுப்பி வைத்துள்ளார். இது குறித்து முகநூலில் பதிவு வைரலாகவு பகிரப்பட்டு வருகிறது.

இது குறித்து கார்த்திகேய சேனாபதி கூறியதாவது: ஒரு சாதியினர் மட்டுமே படிக்கவேண்டும் என்றிருந்தநிலையை மாற்றி அனைவரும் படிக்க பள்ளிகளை கிராமம் தோறும் திறக்க காரணமானவர் பெரியார். அதே போல் இன்று தமிழகத்தில் பல்வேறு சமூகத்தை சேர்ந்த பலரும் ஐ.ஏ.எஸ்.ஐ.பி.எஸ். டாக்டர், வக்கில் என உயர் நிலையை அடைய காரணமாக இருந்தது பெரியாரின் சமூக நீதியே காரணம்.

மேலும், ரஜினிக்கு அனுப்பிய கடிதத்தில் நான்கு கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. பெரியாரை பற்றி அறிந்துகொள்ள உங்கள் குடும்ப சூழல் அனுமதித்திருக்காது. எனவே பெரியார் குறித்த புத்தகங்களை அனுப்பியுள்ளேன், படித்துவிட்டு பதில் அளியுங்கள். நிருபர்களை சந்திக்கும் நீங்கள் ஏன் வீட்டிற்குள் அழைத்து அவர்களிடம் பேசுவதில்லை. உங்களின் கருத்துக்கு மாற்று கருத்து வைப்போரிடம் ஏன் பி.ஜே.பி யின் தமிழக தலைவர்கள் எதிர்வினை ஆற்றுகிறார்கள், நீட்,ஹைட்ரோகார்பன்,5ம், 8ம், வகுப்பு பொது தேர்வு, புதியகல்விக்கொள்கைபற்றியெல்லாம்பேசாமல்50ஆண்டுகளுக்கு முன் இறந்த பெரியாரை பற்றி பேசுவது ஏன்? மேலும்5,8ஆம்வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு குறித்து நாங்கள் பேசக்கூடாதுஎன்பதற்காகளங்களைதிசைதிருப்பவே இந்த நாடகங்களா? பெரியாரின் எழுத்து சீர்திருத்தம், திராவிடமும் ஆரியமும் என்பன உள்ளிட்ட ஏழு புத்தகங்களை தபால் மூலம் ரஜினிக்கு அனுப்பி வைத்துள்ளேன். இவ்வாறு கார்த்திகேய சேனாதிபதி கூறினார்.

---

## கொங்கு மண்டல மேம்பாட்டிற்கு அளப்பரிய சாதனைகளைச் செய்த

# தி.மு.கழகத்தின் பணிகளைக் கூறி பிரச்சாரம்!

## கழகத்தில் இணைந்த காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் கார்த்திகேய சேனாபதி பேட்டி!

சென்னை, நவ.7–

"கொங்கு மண்டலத்தின் மேம்பாட்டுக்கும், அதற்கு அடிப்படையாக அமைந்த இட ஒதுக்கீடு உள்ளிட்ட கொள்கைகளுக்கும் முந்தைய தி.மு.கழக ஆட்சி ஆற்றிய நற்பணிகளைக் கொங்கு மண்டலத்தில் எடுத்துரைத்து பிரச்சாரம் செய்வேன்" என்று தி.மு.கழகத்தில் இணைந்துள்ள "காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் கார்த்திகேய சேனாபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து "தி இந்து" ஆங்கில நாளேட்டில் அதன் செய்தியாளர் ஆர்.கோலப்பன் எழுதியுள்ள சிறப்புச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:–

"கொங்கு மண்டலத்தின் புகழ்பெற்ற பிரமுகரும், "காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநருமான கார்த்திகேய சேனாபதி வியாழனன்று திமுக கழகத் தலைவர் முகஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தி.மு. கழகத்தில் இணைந்தார்.

அப்போது தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் சென்னைக்கு அழைக்கப்பட்டிருந்த அவர் கூறியதாவது:–

"என்னுடைய நோக்கம் கொங்கு மண்டலத்தின் மேம்பாட்டுக்கும், அதற்கு அச்சாணியாக இருந்த இட ஒதுக்கீடு மற்றும் இதர கொள்கைகளுக்கும் கடந்த கால தி.மு.கழக ஆட்சி ஆற்றியுள்ள நற்பணிகளை மக்களுக்கு எடுத்துரைத்து பிரச்சாரம் செய்வதேயாகும்.

1950 ஆம் ஆண்டுகளில் அப்போது தமிழ்நாட்டில் ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் அரசு, முக்குலத்தோரையும், வன்னிய சமூகத்தினரையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில்



சேர்த்தது. கலேல்கர் ஆணையம் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அப்போது கொங்கு வெள்ளாளர் சமூகம் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபட்டு விட்டது.

**கலைஞர் ஆட்சியில்தான் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டது!**

1974 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதுதான் கொங்கு வேளாளர் சமூகமும், இப்பகுதியில் உள்ள பிற சமூகங்களும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டன. இதனை சேனாபதி நினைவு கூர்ந்தார் 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் இவர் தி.மு. சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்தும் வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கார்த்திகேய சேனாபதி மேலும் கூறுகையில், "அதைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் அருந்ததியர் சமுதாயத்தினருக்கு தி.மு.கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட 3 சதவிகித உள் ஒதுக்கீட்டின் மூலம் ஏராளமானோர் சிறப்பாகப் பயன் அடைந்துள்ளனர். இந்தச் சமூகம், இப்பகுதியில் உள்ள முக்கியமாக சமூகங்களில் ஒன்றாகும்.

இட ஒதுக்கீட்டால் ஏற்பட்டுள்ள பயன்களைப் பற்றி எடுத்துரைப்பது மிகவும் அவசியமாகும். ஏனெனில் எங்கள் பகுதியில் பெரும்பாலோர் அரசுப் பணிகளுக்குச் செல்வதற்குப் பதிலாக தொழில் முனைவர் ஆவதற்கே அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றனர்.

ஆற்றல் வாய்ந்த அதிகாரிகளை அந்த சமுதாயத்திலிருந்து உருவாக்கியிருப்பதன் மூலம் இந்தப் பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாக உள்ளது.

தி.மு.கழக ஆட்சியால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச மின்சாரத்திட்டமும் 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன்கள் தள்ளுபடியும் இப்பகுதி மக்களுக்கு மிகவும் துணை புரிந்துள்ளன. இல்லையேல் இப்பகுதியில் உள்ள விவசாயிகளில் பலர் தங்கள் நிலங்களை விற்றுவிட்டு வேறு தொழிலுக்குச் சென்றிருப்பார்கள்.

**தேங்காய் தலைநகர்!**

"இன்று நாங்கள் நாட்டின் தேங்காய்த் தலைநகராக உயர்ந்துள்ளோம்" "தேங்காய் எண்ணெய்யின் அற்புதம்" என்ற நூலைப் படித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மதிய உணவு (சத்துணவு) திட்டத்தில் தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்த உத்தரவிட்டார். மேலும் நியாய விலைக் கடைகளிலும் தேங்காய் எண்ணெய் விற்க உத்தரவிட்டார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பின்னர் அது நிறுத்தப்பட்டு விட்டது."

இவ்வாறு கார்த்திகேய சேனாபதி தெரிவித்தார்.

"தி இந்து" ஆங்கில நாளேட்டின் சிறப்புச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.







### இன்னலுறும் மக்களின் கோரிக்கைகள் அனைத்தும்

# கழகத் தலைவர் முதல்வரானதும் நிறைவேறும்!

## திருப்பூர் 'விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்' நிகழ்வில் கார்த்திகேய சிவசேனாபதி உறுதி!

திருப்பூர், டிச.17 -

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி, வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் "விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்" என்ற தேர்தல் பரப்புரையில் முதல் நிகழ்ச்சியாக தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவும் முதன் முதலில் சந்தித்த இடமான திருப்பூர் இரயில் நிலையம் முன்பு திருப்பூர் மத்திய மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் மேயர் க. செல்வராஜ் தலைமையில், மாநகரப் பொறுப்பாளர்கள் திருப்பூர் தெற்கு டி.கே.டி.மு.நாகராசன், திருப்பூர் வடக்கு ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச் சிலைக்கு கழக சுற்றுச் சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பெண்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

மதம், ஜாதியை வைத்து அரசியல் செய்கிறார்கள், எந்த மதத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் எதிரி இல்லை. மக்கள் பொருளாதார வளர்ச்சி பெற்று நல்ல சமுதாயம் அமைய கல்வி மிகவும் முக்கியம்.

### 'நீட்' டால் நிறைவேறாமல் போன கனவு!

'நீட்' தேர்வால் 10,547 தமிழக ஏழை மாணவ, மாணவிகளின் மருத்துவக் கனவு நிறைவேறாமல் போய் விட்டது. நாம் கட்டும் வரிப்பணத்தில் இங்குள்ள மருத்துவக் கல்லூரிகளில் வடநாட்டு மாணவர்கள் படிக்கிறார்கள். நாம் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் வரி காட்டுகிறோம். ஒரு நல்ல அரசாங்கம், ஒரு நல்ல கட்சி அந்த வரிப் பணத்தை கல்வியாக சாமானிய மக்களுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும். சமூக நீதி என்பது பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ்வில் முன்னேறுவதற்கான வழியாகும்.

1960ஆம் ஆண்டுகளில் இந்திய நாட்டிலேயே ஏழை மாநிலமாக இருந்த மாநிலம் தமிழ்நாடு. இன்றைக்கு இந்திய நாட்டிலேயே முதன்மை மாநிலம் தமிழ்நாடு. அதற்குக் காரணம் திராவிடம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர்.

மத்திய மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் மேயர் க.செல்வராஜ் சொல்லியதைப் போல தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதன் முதலில் சந்தித்த திருப்பூர் திருப்புமுனைக்குப் பெயர் பெற்றனர். 3000 வருடங்களுக்கு முன்பு தொல்காப்பியம் என்ற ஓர் புத்தகத்தை எழுதியது தமிழ்ச் சமூகம், 2500 வருடங்களுக்கு முன்பு சங்க இலக்கியத்தை உருவாக்கியது இந்த தமிழ்ச் சமூகம், 2000 வருடங்களுக்கு முன்பு திருக்குறளை எழுதிய சமூகம், தமிழ் சமுதாயம் அறிவார்ந்த சமுதாயம். சங்க காலத்திலேயே 45 பெண் புலவர்கள் இருந்துள்ளனர். 2600 வருடங்களுக்கு முன்பு கீழடியிலே கால்நடை வைத்து விவசாயம் செய்து, வர்த்தகம் செய்த ஒரு சமூகம், எந்த வித மத எச்சமும் இன்று வரை கீழடியில் இல்லை, தாய்தெய்வ வழிபாடு,



குலதெய்வ வழிபாடு மட்டும்தான் கீழடியில் கிடைத்திருக்கிறதே தவிர இன்று இந்து மதத்திற்கு ஆபத்து என்று சொல்லக் கூடிய எந்த விதமான எச்சங்களும் கிடையாது. அதனால்தான் அங்கு ஆராய்ச்சி செய்வதற்கு மோடியின் இந்துத்துவா அரசாங்கம் அதை எதிர்த்து அழிப்பதற்கான எல்லா முயற்சியும் செய்தது. நமது கழகம் போராடிய பின்னர் தான் தமிழ்நாட்டு அரசாங்கம் அதனை எதிர்த்து அதற்கான வேலையை பார்த்தார்கள். 2600 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களுடைய நாகரீகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் சென்னிமலை அருகில் இருக்கக்கூடிய கொடுமணல் அகழாய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு வடக்கிலிருந்து வந்த ஆரியர்கள், "சூத்திரர்களுக்கு நமக்கு கல்வி தேவையில்லை குலத்தொழில் தான் செய்யவேண்டும்" என்று கூறினார்கள். கல்வியை மறுத்து விட்டனர்.

ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தை திராவிட முன்னேற்றக் கழகம் மாற்றியது. கொங்கு மண்டலத்தில் வேளாளக் கவுண்டர்கள், அருந்ததியர் ஆகிய இரு ஜாதியினரும் அதிகமாக உள்ளனர். இந்த இரண்டு சமுதாய மக்களும் வாழ்வில் முன்னேற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உதவினார். பிற்படுத்தப்பட்ட சமுதாய ஒதுக்கீட்டால் கல்வி பெற்றோம். அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கியதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான். தமிழகத்தில் வருகிற சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று தி.மு.கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் பதவி ஏற்பது உறுதி. அவர் முதலமைச்சர் ஆன பின்பு இந்திய அளவில் அவரது தலைமையில் தேசிய கூட்டணி அமைக்க முயற்சிகள் நடக்கிறது. பா.ஜ.க. அரசை எதிர்த்து இந்த கூட்டணி அமைக்க ஏற்பாடுகள் நடக்கிறது. தமிழகத்தில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை துறையில் முதலமைச்சரின் உறவினர்களுக்கு மட்டுமே பணி ஒப்பந்தம் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படுவதில்லை. தமிழகத்தில் காளை மாடு விவசாயி வீட்டில் இருந்தால் அதை அரசிடம் பதிவு செய்ய வேண்டுமென்று ஒரு சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அவ்வாறு காளை மாடு அரசால் அங்கீகரிக்கப்படவில்லை என்றால் அந்த மாட்டை கொன்று விட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. கோவையில் சிறுவாணி தண்ணீரை தனியார் நிறுவனத்திற்கு தாரை வார்த்து விட்டார்கள். இதுபோல் கஜானா கொள்ளை நடந்து வருகிறது. இந்த ஆட்சிக்கு முடிவுகட்ட நாம் ஒன்றுபடுவோம்.

விவசாய விரோதி எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் கடந்த 10 ஆண்டுகளாக மக்கள் சந்தித்து வரும் இன்னல்களை மக்களிடமே சென்று கருத்து கேட்டு அதை அறிக்கையாக சமர்ப்பிக்கும் வகையில் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் என்னை போல் 15 பேரை நியமித்து தமிழகம் முழுவதும் மக்களை சந்தித்து விவரங்கள் கேட்டு தெரிவிக்குமாறு கோரியுள்ளார். அதன்படி கட்சியின் மாவட்ட செயலாளர்கள், தொண்டர்களுடன் பொது மக்களை சந்தித்து அவர்களின் சிரமங்களை கேட்டறிந்து அவற்றை அறிக்கையாக சமர்ப்பிக்கிறோம். தி.மு. கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக பொறுப் பேற்ற பிறகு அவற்றை தீர்வு காண்பார்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதைத்தொடர்ந்து வளம் பாலம் சென்று திருப்பூர் நொய்யல் ஆற்றில் சாயப்பட்டறை கழிவுநீர் கலந்து நீர் மாசுபடுவதை பார்வையிட்டார், கழக மூத்த முன்னோடி ஆசம் அவர்களின் இல்லம் சென்று நலம் விசாரித்தார், தங்கவேல் திருமண மண்டபத்தில் 200க்கும் மேற்பட்ட அருந்ததிய பெண்களுடன் கலந்துரையாடினார். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு கைதான விவசாயிகள் சங்கத்தினர் திருப்பூர் வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப் பட்டிருந்தனர். அவர்களை சந்தித்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பேசினார்.





### கிழக்கு தொடர்ச்சி மலையையே அழித்து

# 10 ஆயிரம் கோடியில் சாலை போட நினைக்கும் அரசு!

## கழக சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி கண்டனம்!

உள்ளாட்சித்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கோவை மாவட்டத்தில் உள்ள குளங்களை முழுவதுமாக அழித்து விட்டார். ஒரு குளம் என்பது சுற்றுச்சூழலுக்கான கருவி. அந்த குளத்தை சுற்றி கான்கிரீட் சுவர் போட்டு வைத்துள்ளனர். எங்கு பார்த்தாலும், கான்கிரீட் சுவர் போடுகின்றனர். பாலம் கட்டுகின்றனர். என்ன காரணம் என்று பார்த்தால் 30 முதல் 40 சதவீதம் கமிஷன் வாங்க வேண்டும். ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு வாங்கினால், அதில் ரூ.400 கோடி கமிஷன் அடிக்க வேண்டும். அமைச்சர் வேலுமணி குளங்களை சுற்றி கான்கிரீட் சுவர் கட்டி வைத்துள்ளார்.

அந்த குளத்தில் வாழக் கூடிய ஆமைகள் குளத்தை விட்டு 15 அடிக்கு வெளியே வந்து தான் முட்டை போடும். இப்போது அந்த ஆமை இனமே அழிந்து விடும். ஒவ்வொரு இனமும் அழியும் போது மொத்த பல்லுயிருக்கே ஆபத்து வந்து விடும். அந்த புரிதல் அவர்களுக்கு கிடையாது. அவர்களுக்கெல்லாம் கரன்சி ஒன்றுதான் குறிக்கோள். அதில் நிபுணத்துவம் வாய்ந்த எஸ்.பி.வேலுமணி அனைத்து குளத்தையும் அழித்துள்ளார்.

### பொய் கணக்கு!

ஆளும் அ.தி.மு.க. அரசின் தலைமை ஒழுங்காக இருந்தால் எல்லாமே ஒழுங்காக இருக்கும். தலைமை டார்கெட் நிர்ணயிக்கின்றனர். ஒவ்வொரு அதிகாரியும் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று சொல்லி விடுகின்றனர். அதனால், ரூ.100 வசூல் செய்து கொடு என்று சொன் னால், அதிகாரிகள் ரூ.200 வசூல் செய்கின்றனர். ஒரு அலுவலகம் இருக்கிறது. அந்த நிர்வாகம் பொய் கணக்கு எழுதுங்கள். வருமான வரித்துறைக்கு தெரியக் கூடாது. வரும் வருமானமும், செலவும் மாற்றி எழுதுங்கள் என்று கூறுகின்றனர். அந்த ஊழியர்கள் கணக்கு எழுத மாட்டார்கள். கையில் பணம் எடுத்து வைத்து விடுவார்கள்.

இந்த முதலாளி, அரசாங்கத்தை ஏமாற்ற நினைப்பார். அந்த முதலாளியை, ஊழியர்கள் ஏமாற்ற ஆரம்பிப்பார்கள். அதே தான் தமிழகத்தில் நடக்கிறது. அதற்கு காரணம் முழுக்க, முழுக்க எடப்பாடி, ஓ.பி.எஸ். ஆட்சிதான். அவர்கள் டார்கெட்டை நிர்ணயிக்க சொல்கின்றனர். அதிகாரிகள் எந்த கவலையும் இல்லாமல் கொள்ளையடிக்கின்றனர். அவர்கள் ஒரு பகுதியை அமைச்சர்களிடம் கொடுத்து விட்டு, ஒரு பகுதியை அவர்களிடம் வைத்துக் கொள்கின்றனர். டார்கெட் நிர்ணயிப்பதை நிறுத்தினால் ஒழுங்காக இருக்கும்.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கருப்பண்ணன் சோப் போட்டு குளிப்பதால் தான் ஆற்றில் நுரை வருகிறது என்று கூறுகிறார். இப்படியெல்லாம் அமைச்சர்களை வைத்துக்கொண்டு இவர்கள் என்ன ஆட்சி செய்யப் போகிறார்கள். சரித்திரத்தை இவர்கள் புரட்டி பார்த்தால் தெரியும். இப்படி கொள்ளையடித்த பணம் என்றைக்காவது நிலைத்து இருக்கிறதா என்று அவர்கள் பார்த்தால் அதன் மீதான ஆசை போய் விடும். இப்படி கொள்ளையடித்தால் நிலைத்து நிற்காது. ஒரு பொருளை தீதின்றி ஈட்ட வேண்டும். பொருளை ஈட்டுவது தப்பே கிடையாது. பொருளை ஈட்டுவதை பெருமையாக பேசிய சமுதாயம். அப்படி இருக்கக் கூடிய ஒரு சமுதாயத்தில் பொருளை எப்படி ஈட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இவர்களுக்கு அந்த பொருளை எப்படி



ஈட்ட வேண்டும் என்ற கவலை அச்சமும் இல்லாமல் ஈட்டுகின்றார்கள். அப்படி பொருள் ஈட்டுவதால் தான் இந்த பிரச்சினை.

### வளங்களை அழித்து வாழ்வு!

இயற்கையை அழித்து, வளங்களை அழித்து வாழக் கூடிய வாழ்வு வந்து எந்த வித பிரயோஜனமும் இருக் காது. முதல்முறையாக தமிழகத்தில் ஒரு முதல்வர் உட்கார்ந்து கான்ட்ராக்டர்களை அழைத்து கமிஷன் பேசுவது இப்போதுதான் நடக்கிறது. மாசுகட்டுப் பாட்டு வாரியமே மாசு அடைந்து விட்டது என்பதே வருத்தமான செய்தி.

அதை சரி செய்ய தி.மு.க. ஆட்சிக்கு வர வேண்டும். அப்போது தான் சரியாகும். இப்போது நிலைமை மோசமாக உள்ளது. அ.தி.மு.க. அரசுக்கு இதற்கு நேரமே கிடையாது. அ.தி.மு.க. அரசுக்கு தினம், தினம் ஒரு பிரச்சினை உள்ளது. தொடர்ந்து, 4 வருடங்களாகவே இப்படியே நடந்து வருகிறது. பிரதமர் மோடி, அமித்ஷா தயவால் ஆட்சி நடக்கிறது. இவர்கள் எங்கு போய் தொலைநோக்கு பார்வையோடு சிந்திக்க போகிறார்கள். எரிகிற வீட்டில் அள்ளியது லாபம். அதே மாதிரி தான் இவர்கள் இங்கிருந்து அள்ளி போய் வீட்டில் வைத்துள்ளனர். இப்படி சேர்த்த பொருள் என்றைக்குமே நிலைத்து நிற்காது. வேகமாக காணாமல் போய் விடும். இயற்கை தன்னை சரி செய்து கொள்ளும். இயற்கை சுழற்றலில் நாம் தாங்குவோமோ என் பது தான் கேள்வி. இந்த நிலைமை நீடிக்காது. இன்றும் 2, 3 மாதங்களில் இந்த நிலைமை மாறி விடும்.

### வனத்துக்குள் ஒரு திருப்பூர்!

திராவிட அரசியலின் ஆரம்பம் சமூக நீதி அரசியல். அனைவருக்கும் உணவு, கல்வி என அனைத்தையும் தந்தனர். ஐடி கொள்கை, தொழிற்சாலை என்று முன்னேற்ற பாதையில் கொண்டு வந்தனர். இன்று என்ன தேவையோ அதற்கான அணியை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த அணி தொடர்ந்து செயல்படும். தமிழகம் முழுவதும் பசுமையான மாநிலமாக, சுற்றுச்சூழலை கொண்டு செல்லும் மக்கள் இயக்கமாக நாங்கள் மாற்றுவோம். திருப்பூர் மாவட்டத்தில் வனத்துக்குள் ஒரு திருப்பூர் என்று ஒரு அமைப்பு உருவாகியுள்ளது. கோவையில் சிறு துளிர் என்கிற அமைப்பு உருவாகியுள்ளது. திருப்பூரில் சில தொழிலதிபர்கள், அவர்கள் போன தலைமுறை தவறு செய்து விட்டோம். இந்த தலை முறையில் அதை சரி செய்ய முயற்சி செய்வோம் என்று ஒப்புக் கொண்டனர். வனத்துக்குள் ஒரு திருப்பூர் அமைப்பு மூலம் நீராதாரங்களில் வேலை செய்கின்றோம். திருப்பூரில் 12 லட்சம் மரங்கள் நட்டு வைத்துள்ளனர். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து தொழிற்சாலை களில் வரும் கழிவு நீரை சுத்திகரித்து வெளியே விடுகின்றனர். அந்த நீரை மீண்டும் அவர்களே பயன்படுத்திக் கொள்கின்றனர். அந்த நீரை ஆற்றில் விடமாட்டோம் என்று கூறியுள்ளனர்.

அப்படி ஒரு மாற்றம் அங்கு வந்துள்ளது. அதே மாற்றம் எல்லா இடங்களிலும் வரவேண்டும். அரசாங்கமும் அதை கண்காணிக்க வேண்டும். தொழிலுக்கு யாரும் எதிரியாக இருக்க மாட்டார்கள். தொழில் தேவை. முன்னேற்றம் தேவை. ஆனால், எந்தவிதமான தொழில் என்பதை பார்க்க வேண்டும். ஜெர்மனியில் ஆயத்த ஆடை தொழிற்சாலை, தோல் தொழிற்சாலை இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது என்று கூறுகின்றனர். அந்த நாடு பல்லுயிரை பாதுகாப்பது, சுற்றுச்சூழலை பாதுகாப்பது என்று முதலிலேயே முடிவெடுக்கிறது. எல்லா வற்றிலும் ஐரோப்பிய பாணியை பேசும் நாம் சுற்றுச்சூழலிலும் அதையும் பார்க்க வேண்டும். மக்கள் தொகை அதிகம் உள்ள இந்தியாவை வர்த்தக பூமியாக பார்க்காமல் இங்குள்ள மக்களை பாதுகாக்க வேண்டியது நல்ல அரசின் கடமை. மத்திய அரசுக்கு அதைப்பற்றி எந்த கவலை யும் கிடையாது. மூன்று, நான்கு கார்ப்பரேட் கம்பெனிகளுக்காக பிரதமர் மோடி எதை வேண்டுமானாலும் செய்வார்.

எதை வேண்டுமானாலும் அழிப்பார். எடப்பாடி பழனிசாமிக்கு தொலைநோக்கு பார்வை கொஞ்சமாவது இருந்தால் மனசாட்சி இருந்தால் அப்படி செய்யமாட்டார். அவர் கிழக்கு தொடர்ச்சி மலையையே அழித்து அங்கு 10 ஆயிரம் கோடியில் சாலை போட நினைத்தவர். சுற்றுச்சூழலை அழித்து ஒரு தொழிலை உண்டாக்குவது தேவையில்லாதது. அதற்கு மாற்று என்ன வழி என்று கண்டுபிடித்து சுற்றுச்சூழலுக்கு அழிவில்லாத தொழிலை உண்டாக்க வேண்டும்.

— நன்றி
'தினகரன்'
14.2.2021



கடும் குளிரிலும், விவசாயம் காக்க டெல்லியில் தொடர்ந்து போராடும் விவசாயிகளின் குரலை அலட்சியப்படுத்தும் மத்திய பாஜக அரசைக் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணித் தலைவர்களுடன் உண்ணாநிலை அறப்போர்!

3 வேளாண் சட்டங்கள் திரும்பப் பெறப்படும் வரை போராட்டம் தொடரும்!

18 December 2020



விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல் நிகழ்ச்சியின் நான்காம் நாள் சுற்றுப்பயணத்தின் போது, நாமக்கல்லில் 150 இளைஞர்களை கழகத்தில் இணைத்த கல்லூரி மாணவர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்தேன். ஒவ்வொரு கழக உறுப்பினரும் இதுபோல் புதிய இளைஞர்களை கட்சியில் இணைத்து, தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை முதல்வராக உயர்த்த உறுதியாக செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டேன்.






‘விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்‘ பிரச்சார பயணத்தின் போது, பொள்ளாச்சி சுந்தரகவுண்டனூர் பகுதியில் நடைபெற்ற சந்திப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் கலந்துகொண்டு தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். தேர்தல் அறிக்கையில் இவை இடம்பெற வேண்டும் என அவர்கள் கேட்டுக்கொண்டதையும், தளபதி அவர்களின் ஆட்சியில் இந்த குறைகள் நிவர்த்தியாகும் என உறுதியளித்ததையும் தெரிவித்தேன்.












கொங்கு பகுதியின் பழமையான வள்ளியரைச்சல் கிராமத்தை சேர்ந்த பஞ்சாயத்து தலைவர் மற்றும் உள்ளூர் கழக நிர்வாகிகள், கழகத்தையும் தளபதி அவர்களின் தொலைநோக்கு பார்வையில் உருவான சுற்றுச்சூழல் அணியையும் பாராட்டினர். அவர்களுக்கு கழகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்தேன்.

கழக மகளிர் அணிச் செயலாளர்கள் அவர்களுடன் சேர்ந்து, 2021 தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்திற்கு வலுசேர்க்கும் விதமாக மக்களிடையே நேரடி களப் பிரச்சாரம் செய்தோம்.



காங்கேயத்தின் அடையாளமாக விளங்கும் காங்கேயம் பூச்சி காளையின் சிலையை காங்கேயத்தில் நிறுவி, தமிழர்களின் பாரம்பரியத்தையும் உரிமைகளையும் எப்போதும் கழகம் மீட்டெடுக்கும் என்ற நம்பிக்கையை கொங்கு பகுதியில் விதைக்கும் வகையில், சிலையை நிறுவ வேண்டியதைக் வலியுறுத்தினேன்.





24-12-2020 அன்று சுற்றுச்சூழல் அணியின் மாநில செயலாளராக பொறுப்பேற்ற பிறகு, 'திராவிடம் அறிவோம்' என்ற நிகழ்வின் கீழ், பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் நாட்டின் முன்னேற்றத்திற்கு செய்த சாதனைகளை எடுத்துரைக்கும் வகையில், 500 மேற்பட்ட இளைஞர்களை ஒருங்கிணைத்து பயிற்சிப் பாசறையாக்கி, அவர்களை இயக்கத்தின் உறுப்பினர்களாக இணைத்து, தலைவர் தளபதி அவர்களின் பணி கைகளுக்கு வலுசேர்த்தோம்.

உரையாடல் உறுப்பினர் சேர்ப்பு திராவிடம் வெல்லும்!



2021 தேர்தலை முன்னிட்டு, தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்திய கிராம சபை கூட்டங்களில் பங்கேற்று, புணுபும்னிலு-ஐ நாங்கள் நிராகரிக்கிறோம் என்ற பிரச்சாரத்தை தீவிரமாக மேற்கொண்டேன்.

கடந்த 10 ஆண்டுகளில் பும்னிலு இந்த மண்ணிற்கு செய்த துரோகங்களை சுட்டிக்காட்டி, களப்பணிக்குத் தேவையான ஆதரவையும் உறுதியையும் பெற, கிராமங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கழகத்தின் வெற்றிக்கு வழிசேர்க்கும் பங்களிப்பை வழங்கினேன்.

தினகரன் 2/2

## இளைஞர்கள் 120 பேர் திமுகவில் இணைந்தனர்



நத்தக்காடையூர் அருகே நடந்த நிகழ்ச்சியில் திமுக மாநில சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேயசிவசேனாபதி முன்னிலையில் திமுகவில் இணைந்த இளைஞர்கள்.

காங்கயம்,டிச.28: காங்கயம் அருகே திராவிடம் அறிவோம் கலந்துரையாடல் நிகழ்சியில் கலந்து கொண்ட முதல் முறையாக வாக்களிக்கும் 120 இளைஞர்கள் திமுக சுற்று சூழல் அணி செயலாளர் முன்னிலையில் திமுக வில் இணைந்தனர்.

காங்கயம் அடுத்த நத்தக்காடையூர் ஊராட்சி குட்டப்பாளையத்தில், திமுக மாநில சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேயசிவசேனாபதி தலைமையில் திராவிடம் அறிவோம் என்னும் தலைப்பில் கலந்துரையாடல் நடந்தது. காங்கயம் தெகுதி, சென்னிமலை ஒன்றியத்தை சேர்ந்த 120க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்கு கொண்டனர்.

இதனை தொடர்ந்து 120 இளைஞர்கள் திமுகவில் இணைந்தனர். அவர்களுக்கு சால்வை அணிவித்து கட்சி உறுப்பினர் அட்டையை கார்த்திகேயசிவசேனாபதி வழங்கினார். இளைஞர்கள் அனைவரும் முதல் முறையாக வாக்களிக்கும் தகுதி பெற்றவர்கள். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட துணை தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் யுவராஜ், ஈரோடு மாவட்ட உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்ற துணைச் செயலாளர் கவின்மோகன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் தங்கராஜ், பசுவபட்டி ஊராட்சி செயலாளர் கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.










திராவிடம் குறித்து இளைஞர்களிடம் உள்ள கேள்விகளை கேட்டறிந்து, அதற்கான பதில்களை சமகால எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி கூறினோம்.








சுற்றுச்சூழல் அணியின் மாநில செயலாளராக பொறுப்பேற்ற பிறகு, முழு முனைப்புடன் மக்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வையும், தலைவர் உருவாக்கிய சுற்றுச்சூழல் அணியின் தொலைநோக்கு பார்வையையும் பரப்புரை செய்து வருகிறேன்.

தொடர்ந்து 4 ஆண்டுகளாக, குட்டப்பாளையம் சாமிநாதன் நினைவு மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் கீழ் காங்கேயம் சுற்றுப்பகுதிகளில் இலவசமாக மழைநீர் சேகரிப்பு குட்டைகள் அமைத்து தருவது மற்றும் ‘நீரின்றி அமையாது உலகு‘ என்ற தலைப்பில் பல பள்ளி, கல்லூரிகள் மற்றும் பொது நிகழ்வுகளில் விழிப்புணர்வு உரைகள் வழங்கி வருகிறேன்.

















தினகரன் 1/2

## பா.ஜ.விடம் இருந்து நம்மை காப்பாற்ற மு.க.ஸ்டாலின் முதல்வராக அமர வேண்டும்

### கார்த்திகேய சிவசேனாபதி பேச்சு



காங்கயம் அருகே நத்தக்காடையூருக்கு நேற்று வந்த தி.மு.க. சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

காங்கயம், டிச.3: காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய நிர்வாக இயக்குனர் கார்த்திகேய சிவசேனாபதி தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாநிலசெயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். தனது சொந்தகிராமமான நத்தக்காடையூர் அருகே குட்டப்பாளையத்தில் இருந்து எடுக்கப்பட்ட தேன், காங்கயம் இன பசு நெய் ஆகியவற்றைபரிசாக வழங்கினார். நேற்று நத்தக்காடையூர் திரும்பிய கார்த்திகேய சிவசேனாபதிக்கு தி.மு.கவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதில், காங்கயம்வடக்கு ஒன்றியசெயலாளர்சிதம்பரம்தலைமையில், காங்கயம் துணை சேர்மன் ஜீவிதா ஜவஹர் முன்னிலையில் தி.மு.கவினர்மாலை அணிவித்துவரவேற்றனர். அதன்பின், கார்த்திகேய சிவசேனாபதி பேசியதாவது:

தமிழகத்தின் நலனை முதல்வர் எடப்பாடி பழனிசாமி டெல்லிக்கு அடமானம் வைத்து விட்டார். வரும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை முதலமைச்சராக அமர்த்துவதே நமது ஒரே பணி. எனவே, நாம் அனைவரும் ஒற்றுமையாக பாடுபட்டு தமிழகத்திலுள்ள 234 சட்டமன்றதொகுதிகளிலும் நம் வேட்பாளர் உதயசூரியன் மட்டுமே என எண்ணி வாக்களித்து வெற்றிபெற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், நம் கூட்டணி கட்சிகளை ஒன்றுசேர்த்து ஒற்றுமையாக பாடுபட்டு நமக்குள்ளே இயக்கம் ரீதியாக, தனி நபர் ரீதியாக உள்ள சின்ன, சின்ன வேறுபாடுகளை முற்றிலும் மறந்து வரும் சட்டமன்றதேர்தலில் தலைவர் மு.க.ஸ்டாலினை முதலமைச்சர் ஆக்குவதே முதல் நோக்கமாக கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் தமிழ்நாட்டிற்கும், தமிழ் சமூகத்திற்கும் மிகப்பெரிய ஆபத்து இப்போது வந்து கொண்டிருப்பது போல் இன்னும் இரட்டிப்பு மடங்காக வர ஆரம்பித்து விடும். மேலும், பா.ஜ. ஆட்சியில் இருந்து நம்மை காப்பாற்றிகொள்ள மு.க.ஸ்டாலின் முதல்வராக அமர வேண்டும்.

திருப்பூர், ஈரோடு மாவட்ட பகுதியை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நன்கு புரிந்து வைத்து உள்ளனர். காங்கயம் பகுதியில் செயல்பட்டு வரும் அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், சுற்றுச்சூழல், காங்கயம் காளைகள் ஆகியவை பற்றி அன்போடும், புரிதல் உணர்வுடனும் கேட்டறிந்தார். கோவை, திருப்பூர், கரூர் ஈரோடு மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்புகளை எல்லாம் இழந்து மிகவும் ஏழ்மை நிலையில் கஷ்டப்படுபவர்களை பற்றி கேட்டறிந்தார். எனவே, வரும் தேர்தலில் நாம் அனைவரும் தி.மு.க. ஆட்சி அமையவும், மு.க.ஸ்டாலின் முதல்வராக அமரவும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு அயராது பாடுபட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதைத்தொடர்ந்து, கார்த்திகேய சிவசேனாபதிக்கு ஒன்றியதுணை செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி ஈஸ்வரமூர்த்தி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சக்திவடிவேல், ஊராட்சி மன்ற தலைவர்கள் செந்தில்குமார் (நத்தக்காடையூர்), தோமணி சிவக்குமார் (மறவபாளையம்), ஈஸ்வரமூர்த்தி (கீரனூர்), துணைத்தலைவர் சுதா விஸ்வநாதன், விவசாய அணி அமைப்பாளர் விஸ்வநாதன், வர்தகர் அணி அமைப்பாளர் கனகராஜ், துணை அமைப்பாளர் சுப்பிரமணியம், கிளை செயலாளர் செல்லமுத்து உட்பட பலர் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

முடிவில், சுற்றுச்சூழல் காப்பதன் அவசியத்தை வலியுறுத்தி நாவல், பூவரசு, வேம்பு, புங்கை உட்பட 300 மரக்கன்றுகள் நகர, கிராம பொதுமக்கள் மற்றும் தி.மு.க.வினர் உட்பட அனைவருக்கும் வழங்கப்பட்டன.

தமிழக மக்களின் நலன்களை

## டெல்லிக்கு அடகு வைத்தவர்களை வீட்டிற்கு அனுப்புவோம்!

### கழக சுற்றுச் சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சேனாபதி பேச்சு



திருப்பூர், டிச2 -

தமிழக மக்களின் உரிமைகளை நலன்களை மத்திய பா.ஜ.க. அரசிடம் அடகு வைத்திருக்கும் அ.தி.மு.க. ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவோம் என்று திருப்பூர் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கழக சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சேனாபதி பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கார்த்திகேய சேனாபதி பேசியதாவது:-

தளபதி அவர்கள் மிகப்பெரிய தொலை நோக்குப் பார்வையுடன் இந்திய நாட்டிலேயே முதல்முறையாக சுற்றுச்சூழலுக்கு ஒரு அங்கீகிக்கப்பட்ட கட்சி ஒரு அமைப்பினை உருவாக்கி சுற்றுச்சூழலைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று வள்ளுவர் வாக்கிற்கிணங்க சுற்றுச்சூழலுக்கான ஒரு அமைப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்திய நாடு முழுவதும் பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தி இருக்கிறது சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இளைஞர்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் இணைந்து நானும் என்னுடைய நன்றியையும் வாழ்த்துக்களையும் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாங்களெல்லாம் கொங்கு பகுதியை சார்ந்தவர்கள், இந்த கொங்கு பகுதியிலே மிகப் பெரிய தலைவர்கள் இருந்த பகுதி. தீரன் சின்னமலை காலிங்கராயன், மோகன் குமாரமங்கலம், திராவிடர் இயக்கத்தை எடுத்துக் கொண்டோம் என்றால் தளபதி அர்ஜுனன் பழைய கோட்டையிலே பதினெட்டாவது வயதிலேயே திராவிட கழகத்தில் பொருளாளராக இருந்தவர்.

அறிஞர் அண்ணா, கலைஞர் எல்லாம் இந்த ஈரோட்டு மண்ணிலே வந்து பெரியாரிடம் பாடம் கற்றுக் கொண்டவர்கள் என்று நமக்கெல்லாம் தெரியும். இப்படி அருமையான தலைவர்களை எல்லாம் உருவாக்கி நமது கழகத்திலும் சரி பெத்தாம்பாளையம் பழனிசாமி ஐயா, முகண்ணப்பன் தேவராயபுரம் துணைத்தலைவர்கள் என்னுடைய தாத்தா குட்டப்பாளையம் சாமிநாதன் போன்ற நல்ல தலைவர்கள் எல்லாம் இந்த கொங்கு பகுதியிலே இருந்தனர். இன்று எங்கள் கொங்கு பகுதிக்கு ஒரு அவமானச் சின்னமாக எங்களுக்கு அவமானத்தை கொடுக்கக்கூடிய ஒருவர் தமிழ்நாட்டை ஆண்டு கொண்டு தமிழக மக்களின் நலன்களை டெல்லிக்கு அடகுவைத்து தமிழகத்தை அழிவுப் பாதையில் எடுத்துச் செல்வது எங்களுக்கு எல்லாம் பெரிய வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கிறது.

அவருடைய ஆட்சியை நீக்க 2021 வருடம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தளபதி அவருடைய ஆட்சி கொண்டு வருவதற்கு நாமெல்லாம் ஒற்றுமையுடன் பாடுபடுவோம் என்று இங்கு ஒரு உறுதியினை எடுத்துக் கொள்வோம். மே மாதம் 21 ஆம் வருடம் தளபதி ஆட்சிக்காக நாங்களெல்லாம் கரம் கோர்த்து பாடுபடுவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் உரிமைகளை ஒன்றிய அரசிடம் அடகு வைத்து, நீட், எட்டு வழிச் சாலை போன்ற தமிழக மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் செயல்களை செய்தவர்களை வீட்டிற்கு அனுப்புவோம், தலைவரை முதலவராக அரியணை ஏற்றுவோம் என பரப்புரை செய்தேன்.

**சுற்றுச்சூழல் பாதிப்பு உங்கள் பகுதியில் உண்டா???**

**அப்படி இருப்பின் தக்க ஆதாரத்துடன் இந்த dmkenvironmentwing@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.**



கார்த்திகேய சிவசேனாபதி

மாநில செயலாளர், திமுக சுற்றுச்சூழல் அணி

#KARTHIKEYA SIVASENAPATHY

2020 டிசம்பர் 27 அன்று, 'சுற்றுச்சூழல் பாதிப்பு உங்கள் பகுதியில் உண்டா?' என்ற கேள்வியுடன் குறை கேட்பு பிரச்சாரம் நடத்தி, பாதிப்பு உள்ள இடங்களை தொடர்புடைய ஆதாரங்களுடன் dmkenvironmentwing@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டேன்.



நமது கழகத் தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு பார்வையில் இயற்கையைப் பேணிக்காக்க உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் அணியின் இலச்சினையைத் தலைவரின் கரத்தால் இன்று வெளியிட்டதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களும், பொதுச்செயலாளர் திரு. துரைமுருகன் அவர்களும் இலச்சினையைக் கையெழுத்திட்டு வெளியிட்டனர். கழக சுற்றுச்சூழல் அணியின் இலச்சினையை அறிமுகப்படுத்துவதில் மிகுந்த மகிழ்ச்சி!இயற்கையோடு இணைந்த வளர்ச்சி என்ற இலக்கோடு செயலாற்றுவோம்.




கழகத் தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் ‘எல்லோரும் நம்முடன்‘ என்ற இணையவழி புதிய உறுப்பினர் சேர்க்கைத் திட்டம் அறிவிக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.












திருக்குறள் மற்றும் சங்க இலக்கியங்கள் மாடுகளை செல்வமாகக் குறிப்பிடும் நிலையில், நமது 4500 ஆண்டுகள் பழமையான வாழ்வில் மாடுகளுடன் கொண்ட உறவினை வலியுறுத்தும் வகையில், திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காங்கேயம் கால்நடைத் திருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். விழாவிற்குப் பிறகு, வள்ளியரச்சலில் உள்ள என் தாத்தா திரு. சாமிநாதன் அவர்களின் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தி, அவரது நினைவாக அமைக்கப்பட்ட மழைநீர் பண்ணைக்குட்டையை பார்வையிட்டு, பயனடைந்து வரும் கிராம மக்களுடன் கலந்துரையாடினார்.





தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஒரு சிறு விவசாயிக்கு தோட்டத்தில் மழைநீர் சேகரிப்பு குட்டை அமைத்து தர பார்வையிட்ட போது

தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாகத் தமிழகம் முழுவதும் பல்வேறு சுற்றுச்சூழல் சார்ந்த பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறோம். அதன் ஒரு பகுதியாகத் திருப்பூர் மாவட்டம் காங்கயம் பகுதியில் முத்தூருக்கு அருகே உள்ள கிராமத்தில் ஒரு சிறு விவசாயியைத் தோட்டத்திற்குச் சென்று மழைநீர் சேகரிப்பு குட்டை அமைத்துக் கொடுப்பதற்காகப் பார்வையிட்டோம்.



'இயற்கையோடு இணைந்த வளர்ச்சி' என்ற நோக்கோடு செயலாற்றவுள்ள

**கழக சுற்றுச்சூழல் அணியின் இலட்சினையை அறிமுகப் படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்!**

**தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!**

சுற்றுச்சூழல் அணி - திமுக

சென்னை,ஜன.22–

இயற்கையோடு இணைந்த வளர்ச்சி என்ற இலக்கோடு செயலாற்றவிருக்கும் கழக சுற்றுச்சூழல் அணியின் இலட்சினையை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைவதாக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (21.01.2021) தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ள செய்தியின் விவரம் வருமாறு:–

**கழக சுற்றுச்சூழல் அணியின் இலட்சினையை அறிமுகப்படுத்துவதில் மிகுந்த மகிழ்ச்சி!**

**'இயற்கையோடு இணைந்த வளர்ச்சி' என்ற இலக்கோடு செயலாற்றவிருக்கும் அணிக்கும், திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்களுக்கும் வாழ்த்துகள்!**

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது 'முகநூல்' பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுச்சூழல் அணி - திமுக








திருப்பூர்
காங்கயம் கால்நடைத் திருவிழா




நாளிதழ்களில்...
தினகரன்
15ல் காங்கயம் கால்நடைத்திருவிழா
தினத்தந்தி
காங்கேயம் கால்நடை திருவிழா
உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கிறார்
தினமணி
முரசொலி
ksivasenapathy




Subbu
FOTOGRAFI





# கிழக்கு தொடர்ச்சி மலையையே அழித்து 10 ஆயிரம் கோடியில் சாலை போட நினைக்கும் அரசு

திமுக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி












VI முரசொலி சென்னை 1. 3. 2021

தமிழர்களின் எழுச்சி நாளான **மார்ச் 1** - இன்று
கழக சுற்றுச்சூழல் அணியின் முன்னெடுப்பினால்
கீழ்க்கண்ட நலத்திட்ட பணிகள் நடைபெறவுள்ளது.

1. மாநிலம் முழுவதும் நாற்றுப்பண்ணைகள் மூலம் மரக்கன்றுகள் மக்களுக்கு வழங்கப்படவுள்ளது. இடம் மற்றும் தொடர்பு எண்கள் :

| | | | | |
|---|---|---|---|---|
| காங்கயம் | கன்னியாகுமரி | தஞ்சாவூர் | மதுரை | தருமபுரி |
| 96559 12456 | 87781 07117 | 97874 30540 | 88700 49319 | 98944 69089 |
| சென்னை | பொள்ளாச்சி | கோவை 1 | கோவை 2 | சிவகங்கை |
| 97909 64771 | 82489 29311 | 96265 25197 | 90954 91280 | 88380 72776 |
| ஈரோடு | காஞ்சிபுரம் 1 | காஞ்சிபுரம் 2 | | |
| 9361166164 | 97890 23417 | 9962550519 / 9626792318 | | |

2. காங்கயம் அருகே 80X80 அடி சுற்றளவில் 8 அடி ஆழத்தில் மழைநீர் சேகரிப்பு பண்ணைக்குட்டை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இது தொடரும்.

விடியலை நோக்கி நமது பயணம் தொடரும்

கார்த்திகேய சிவசேனாபதி
மாநிலச் செயலாளர் - தி.மு.க சுற்றுச்சூழல் அணி
ksivasenapathy



திமுக சுற்றுச்சூழல் அணி ஏற்பாட்டில் மக்களுக்குச் சுத்தமான குடிநீர் வழங்குதல் மற்றும் நீர் சம்பந்தமான பிரச்சனைகள் குறித்த தொழில்நுட்ப கலந்தாய்வுக் கூட்டம் ICCW மற்றும் IITM பங்கேற்புடன் நடைபெற்றது.



தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழகத்தைப் பசுமை மாநிலமாக மாற்றக் கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பில் தமிழகம் முழுவதும் 15 இடங்களில் இலவச நாற்றுப்பண்ணை அமைக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.









Today morning in R.S.Puram coimbatore in my Thondamuthur constituency meeting residents and farmers of the farmers market.







தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று வெளியிடப்பட்ட எனது புத்தகமான 'நான் கண்ட கலைஞர்' திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் மக்களுக்கு என்ன செய்தது? என்று அறிந்தும் அறியாதது போல் கேட்போருக்கு இந்த புத்தகம் பதிலாக அமையும் என்றும் கழக ஆட்சியில் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு, கொங்கு மண்டலத்துக்குச் செய்த சாதனைகளின் பட்டியலைத் தக்க சமயத்தில் தொகுத்து அளித்துள்ள சிறப்பான நூல் எனத் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.

## தேர்தல் பணிகள் !!!








‘திமிலுள்ள காங்கேயம் காளைகள்.‘

தமிழர்களின் பாரம்பரிய அடையாளம்,சிந்து சமவெளி முதல் கீழடி நாகரிகம் வரை 3000 ஆண்டுகளுக்கும் மேல் நம்மோடு நெருங்கிய தொடர்புடைய ‘திமிலுள்ள காங்கேயம் காளைகள்‘ இன்று மக்களின் பார்வைக்காக.நேரம் : மாலை 5 மணி முதல்.

இடம் :
செல்பி ஸ்பாட், RS புரம்,
கோவை.









தொண்டாமுத்தூர் தொகுதிக்கான கழக தேர்தல் அறிக்கை













தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தங்களை முழுமையாகத் தேர்தல் பணியில் ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்றிய நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகளுக்கு நன்றி தெரிவிப்புக் கூட்டம் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் திரு. ஏீ யூ ராமச்சந்திரன் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. 24 April 2021

தமிழக சட்டப்பேரவைக்கான வாக்கு எண்ணிக்கை நாளை கோவை நூளீவீ கல்லூரியில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, இடத்தை பார்வையிட்டு தேர்தல் ஆணையத்தின் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்தோம். உடன் சுற்றுச்சூழல் மற்றும் மருத்துவரணி மாநில துணைச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், முதன்மை முகவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



வாய்க்காலில் கான்கிரீட் தளம்

# தி.மு.க., சுற்றுசூழல் அணி கோரிக்கை

சென்னிமலை, மே 28–

கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியை, விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் நடத்திய பிறகே, தொடங்க வேண்டும் என்று, தி.மு.க., சுற்றுசூழல் அணி, முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து, அந்த அணியின் மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, முதல்வர் ஸ்டாலினுக்கு, எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கீழ்பவானி வாய்க்கால், 201 கி.மீ., நீளம் கொண்டது. திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களை உள்ளடக்கி, 2.07 லட்சம் ஏக்கர் பாசனத்துக்கு உதவுகிறது. கடந்த, 2013ல் கீழ்பவானி கால்வாய் முழுவதும் கான்கிரீட் தளம் அமைக்க, உலக வங்கியின் உதவி நாடப்பட்டு, 1,210 கோடி ரூபாய் மதிப்பில் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டது. விவசாயிகள் தரப்பில் எதிர்ப்பு கிளம்பவே, அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, திட்டத்தை திரும்ப பெற்றார்.

ஆனால், இந்த திட்டத்தை முந்தைய அ.தி.மு.க., அரசு ஒப்பந்தத்தை நிறைவேற்றி, பணியையும் தொடங்கினர். இந்த திட்டத்தால், கொங்கு பகுதி விவசாயிகள், மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கும்.

எனவே, கீழ்பவானி வாய்க்காலில், கான்கிரீட் அமைக்கும் திட்டத்தை, விவசாயிகள் மற்றும் மக்களின் கருத்துகளை கேட்ட பிறகே முன்னெடுப்பது முறையாகும்.

போலி விவசாய சங்கங்களை உருவாக்கி, இந்த திட்டத்தில் பாதிப்பில்லை என்பதுபோல், வரைவை உருவாக்க முந்தைய அ.தி.மு.க., அரசு முயற்சி மேற்கொண்டது. எனவே, மக்களின் கருத்தை கேட்டு, ஆலோசித்த பிறகே, திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பது, மக்களின் கோரிக்கையாக உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.






தற்போதைய முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் வாக்குறுதியின் அடிப்படையில், கீழ்பவானி பாசன விவசாயிகளின் நலனை பாதுகாக்க, வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு.சு.முத்துச்சாமி தலைமையில் நடைபெற்ற இருதரப்பு விவசாயிகள் கூட்டத்தில், பாசனத்திற்கான நீர் வழக்கம் போல ஆகஸ்ட் 15ல் திறக்கப்படும் என்றும், எந்த விவசாயியும் பாதிக்கப்படாமல் வாய்க்கால்கள் சீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மினு நன்றி தெரிவிக்கும் வகையில், விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

எனது தாத்தா குட்டப்பாளையம் திரு.சாமிநாதன் அவர்களின் நினைவாக முத்தூரில் எங்கள் குடும்பம் நடத்தி வரும் 25,000 சதுர அடி பரப்பளவுள்ள ஆனூர் வித்யாலயா பள்ளியை தற்போது கொரோனா சிகிச்சை மையமாக பயன்படுத்திக்கொள்ள அரசிடம் வழங்கினோம்.














தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி கழக சுற்றுச்சூழல் அணி சார்பாக நமது பல்வேறு நலத்திட்ட உதவிகளைச் வழங்கினோம். அதன் ஒரு பகுதியாகத் தருமபுரி,உசிலம்பட்டி ஆகிய இடங்களில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வுகள் நடைபெற்றன. மேலும் பொதுமக்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது. இயற்கை நலன் சார்ந்த பணிகளில் ஈடுபட்ட துணைச் செயலாளர்கள் அனைவருக்கும் பாராட்டுகள்.

















மாண்புமிகு முதல்வரும்,
கழகத் தலைவருமான தளபதி
திரு.மு.க ஸ்டாலின் அவர்களின்
வழிகாட்டலில் உலக சுற்றுச்சூழல்
தினத்தை முன்னிட்டு கழக சுற்றுச்சூழல்
அணியின் சார்பாக ஓவியம் மற்றும்
வாசகங்கள் எழுதும் போட்டிகள்
நடைபெற்றது. அதற்கான பரிசளிப்பு விழா
மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள்
பங்கு கொண்ட கருத்தரங்கு நிகழ்வு
ஆகியவை இணையம் வாயிலாக
நடைபெற்றது.





தமிழகத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டம் செயல்படுத்தப்படாது

# மு.க.ஸ்டாலின் அறிவிப்புக்கு தி.மு.க. சுற்றுச்சூழல் அணி பாராட்டு

முத்தூர், ஜூன்.17-

மத்திய அரசு அறிவித்த ஹைட்ரோ கார்பன் திட்டம் தமிழகத்தில் ஒருபோதும் செயல்படுத்தப் படாது என்ற தமிழக முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்புக்கு தி.மு.க சுற்றுச்சூழல் அணி பாராட்டு தெரிவித்து உள்ளது.

இதுகுறித்து தி.மு.க சுற்றுச்சூழல் அணியின் மாநிலசெயலாளர் குட்டப்பாளையம் கார்த்திகேய சிவசேனாபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

## ஹைட்ரோ கார்பன் திட்டம்

கடந்த 10-ந் தேதி அன்று மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் நாடு முழுவதும் 75 இடங்களில் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை செயல்படுத்த ஏலம் விடப்படுவதாக அறிவித்தது. இதில் தமிழ்நாட்டின்

கார்த்திகேய சிவசேனாபதி

வடதெரு என்ற பகுதியும் அதில் அட்டவணைப்படுத்தப்பட்டு உள்ளது.

ஹைட்ரோ கார்பன் திட்டம்செயல்படுத்தப்படும் பட்சத்தில் தமிழ்நாட்டின் அடிநாதமாக விளங்கும் விவசாயமும், விவசாயிகளும் மிக கடுமையான பாதிப்புக்கு உள்ளாவார்கள். மேலும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்

விளைவிப்பதாக அமையும்.

## பிரதமருக்கு கடிதம்

எனவே மத்திய அரசு இத்திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாட்டின் எந்தப் பகுதியையும் ஏல அட்டவணையில் கொண்டுவரக்கூடாது எனவும், அதற்கு தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது எனவும் பிரதமர் மோடிக்கு தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் வாயிலாக தெரிவித்து உள்ளார்.

விவசாயிகளின் நலனில் சமரசம் இல்லை என்ற அடிப்படையில் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய காவிரி டெல்டா பகுதியை ஹைட்ரோ கார்பன் திட்டம் பாதிக்கும். இது போன்ற திட்டங்களை திட்டவட்டமாக மறுத்த தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு பாராட்டுக்குரியது. இவ்வாறு அதில்

தமிழ்நாட்டில் இனி விவசாயமும். விவசாய நிலங்களுக்குமே முன்னுரிமை அளித்து பாதுகாக்கப்படும்! விவசாய நலத்திற்கு எவ்வித பாதகம் ஏற்படுமாயினும் அதனை கழக அரசு அனுமதிக்காது!








கோவை சுண்டக்காமுத்தூர் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சமூக சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட நற்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கழகத்தின் மேல் கொண்ட பற்றால் கழக சுற்றுச்சூழல் அணியில் இணைந்து தற்போது செய்து வரும் பணிகளை இன்னும் அதிக உத்வேகத்தோடு மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தனர். அவர்களை நேரில் அழைத்து வாழ்த்தினேன். சுற்றுச்சூழல் அணி அவர்கள் கழக பணியில் உடன் இருக்கும் என உறுதி அளித்தேன் .



கடந்த அதிமுக ஆட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கோவை பந்தயச் சாலையில் அடர்த்தியான, இயற்கைக் காற்றோடு சுற்றுச்சூழலுக்கும், மனிதர்களுக்கும் நன்மை பயக்கும் வகையிலிருந்த மரங்கள் வெட்டப்பட்டு கான்கிரீட் மயமாகி வந்தது. அந்த சாலையின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு தனது பொலிவை இழந்து வந்தது.ஸ்மார்ட் சிட்டி திட்டம் மூலம் சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படுவதை ஆரம்பம் முதலே கழக சுற்றுச்சூழல் அணி எதிர்த்து வருகிறது. மேலும், தேர்தலுக்கு முன்பாகவே பந்தயச் சாலையில் உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்களுடன் இணைந்து இது குறித்து நமது எதிர்ப்புக் குரலைத் தெரிவித்தோம். கோவை மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் புகார் மனுவையும் அளித்தோம்.



சுற்றுச்சூழல் எழுத்தாளர் திரு. நித்யானந்த் ஜெயராமன் அவர்களுடன் இணைந்து சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மாண்புமிகு திரு.சிவ.வீ. மெய்யநாதன் அவர்களை சந்தித்தோம். தமிழ்நாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த மூன்று சுற்றுச்சூழல் பிரச்சனைகள் குறித்து அமைச்சரிடத்தில் கோரிக்கை வைத்துள்ளோம்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் கழக சுற்றுச்சூழல் அணி சார்பாகச் சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட கிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் தொகுதி, மேற்கு பகுதி சின்னசெக்காடு 100வது வட்டத்தில் கொரோனா காலத்தில் முன்களப் பணியாளர்களாக பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு உதவித்தொகை வழங்கும் விழா நடைபெற்றது.



மாட்ராஸ் முதலை வங்கி மற்றும் பாம்பு பாதுகாப்பு துறையில் பணியாற்றும் தஞ்சாவூர் மாணவர் திரு. கணேஷ் முத்தையாவை சந்தித்து, அவர் பரிசளித்த Snakes of India நூலை பெருமையுடன் ஏற்றுக் கொண்டேன். காவேரி ஆற்றுப் படுகையில் தஞ்சாவூர் ரெப்டைல் பூங்கா என்ற பாதுகாப்பு மையம் தொடங்க உள்ளதையும் மகிழ்வுடன் அறிந்தேன். அவருடன் இணைந்து மேலதிக அறிவைப் பெற விருப்பம் தெரிவித்தேன். சந்திப்பை எஸ்.எம்.எஸ். மீனாட்சி மற்றும் திரு. பத்மநாபன் ஏற்பாடு செய்தனர்.










மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டலில் கோவை மாநகரில் குளங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்த போது




கோவையை மையமாக வைத்து தலைவர் கலைஞர் அவர்களின் பெயரில் ஒரு மிகப்பெரிய நூலகம் அமைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் திரு.னி. லு. றீமிழியிஷ்ஜ அவர்களிடம் வழங்கினேன்.

அந்த நூலகம் கோவை மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களைச் சார்ந்த மக்களுக்கு ஓர் அறிவுக் களஞ்சியமாக விளங்கும் எனவும், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகுபவர்கள், பொது அறிவை வளர்த்துக்கொள்ள விரும்புகிறவர்கள், நமது திராவிட சித்தங்களைப் படிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் எனப் பலரும் பலவித காரணங்களுக்காகப் பயன்பெறுவார்கள்.



சென்னை மணலி சின்னசேக்காடு பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பணியாற்ற தயாராக இருப்பதாகக் கூறி மிகுந்த ஆர்வத்துடன் என்னை சந்தித்தனர். மேலும் சுற்றுச்சூழல் அணியில் இணைந்து செயல்படவும் தயாராக உள்ளனர். இளைஞர்களின் பங்களிப்பே இன்றைய முக்கியத் தேவையாக உள்ளது. எனவே, கழக சுற்றுச்சூழல் அணிக்கு அனைவரையும் அன்போடு வரவேற்பதாகத் தெரிவித்தேன்.



கோவை குளங்கள் பாதுகாப்பு அமைப்பு சார்பாக நேற்று (01.08.2021) கோவை பேரூர் பெரியகுளத்தில் 'WATER WARRIOR' அடர்வனப் பூங்காவில் 2000 மரக்கன்றுகள் நடும் விழாவில் பங்கேற்று மரக்கன்றுகளை நட்டு வைத்தேன். மேலும் இவர்களின் சுற்றுச்சூழல் சார்ந்த பணி மேன்மேலும் தொடர வேண்டும் என்று வாழ்த்துகளையும் தெரிவித்தேன்.






மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்களை இன்று சந்தித்தோம். கழக சுற்றுச்சூழல் அணி மற்றும் கோவையில் உள்ள சுற்றுச்சூழல் அமைப்புகளான அருளகம், ஆச்சான் குளம் பாதுகாப்பு சங்கம், அழகான கோவை, C4TN, கோவை குளங்கள் பாதுகாப்பு அமைப்பு, CUBE, கௌசிகா நதி பாதுகாப்பு இயக்கம், நீர் நிலைகள் பாதுகாப்பு அறக்கட்டளை, ஓசை, RAAC, சிறுதுளி ஆகியவை இணைந்து கோவை மாநகரில் உள்ள குளங்களை ஆய்வு செய்தோம்.

நூற்றுக்கணக்கான பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களுக்கு பெரிய அளவில் பயனளிக்கும் முடிவினை அறிவித்துள்ளார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். சமூகநீதியின் பிறப்பிடம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நினைவுப்படுத்தும் வகையிலும், கழக அரசு சமூக நீதி பாதையில் தொடர்ந்து பயணிக்கும் என்பதை உணர்த்தும் வகையிலும் முதல்வர் அவர்கள் இந்த ஆணையை பிறப்பித்துள்ளார்.





திருவண்ணாமலை மாவட்டத்தில் பராமரிக்கப்படாமல், பழைய நிலையிலுள்ள கிணறுகளை அடையாளம் கண்டு உள்ளூர் மக்களின் பங்களிப்போடு அவற்றை புணரமைத்து சீர் செய்து கொடுக்கும் ஒரு சிறப்பான பணியை செய்து வருகிறார் கட்டிட வடிவமைப்பாளர் சகோதரி மது மஞ்சரி அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தேன். கழக சுற்றுச்சூழல் அணி துணைநிற்கும் என உறுதி அளித்தேன்.



கோவை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜகோபால் சுங்கரா அவர்களைச் சந்தித்தோம். ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அதை மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என் நேரு அவர்களிடம் சமர்பித்தோம். ஆய்வின் அடிப்படையில் அதை நடைமுறைப்படுத்துவது குறித்து அவருடன் கலந்தாலோசித்தோம்.



கோவை புளியம்பட்டி இளைஞர்கள் பலர் தங்களை கழக சுற்றுச்சூழல் அணியில் இணைத்துக்கொண்டு சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான பணிகளை செய்யத் தயாராக இருப்பதாக தங்களின் விருப்பத்தை தெரிவித்தனர். அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்று கழக தலைவரும், மாண்புமிகு முதல்வருமான திரு. மு க ஸ்டாலின் அவர்கள் சுற்றுச்சூழல் நன்மைக்காக தொலைநோக்கு சிந்தனையோடு எடுத்து வரும் நடவடிக்கைகள் மற்றும் அவரது பங்களிப்புகள் குறித்து அவர்களிடம் விளக்கினேன்.





தலைவர் கலைஞர் அவர்களின் மூன்றாமாண்டு நினைவு நாளையொட்டி கழக சுற்றுச்சூழல் அணி தலைமை அலுவலகத்தில் அவரது நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலையிட்டு, மலர் தூவி மரியாதை செலுத்தினோம்.





பல்லடம் (PAP) புதிய பாசன பகுதி விரிவாக்கம் கோரும் இயக்கத்தின் தலைவர், நிர்வாகிகள் மற்றும் பல்லடம் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் இணைந்து, விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்தேன். அவர்களது பிரச்சனைகளில் கழகம் துணை நிற்கும் என உறுதி அளித்தேன்.



கோவை மாவட்டம் ஒண்டிப்புதூர் பகுதியில் வெளிவரும் கழிவுநீரை சுத்திகரித்து அதை விவசாயத்திற்கு பயன்படுத்த அரசின் அங்கீகாரமும், ஆதரவும் வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்களிடம் எடுத்துரைத்தோம்.



10 ஆகஸ்ட் 2021 அன்று, கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட குடிநீர் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் என மாநில திட்டக்குழு துணைத்தலைவரிடம் கோரிக்கை எழுப்பினேன்.



ஈரோடு மாவட்டம் பவானி நகர கழக செயலாளர் திரு. ப.சி. நாகராசன் அவர்கள் இன்று மரியாதை நிமித்தமாக என்னை சந்தித்து, பவானி மற்றும் காவிரி ஆறுகளில் நிலவும் நீர்கசிவு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டு பிரச்சனைகள் குறித்து தனது கவலையை தெரிவித்தார். மேலும், பவானி சங்கமேஸ்வரர் ஆலய வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் திட்டத்திற்கு கழக சுற்றுச்சூழல் அணியின் உதவி தேவை என்று கோரினார். அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தேன். சந்திப்பில் பவானி நகர கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.









THE COVAI MAIL

ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER

100 நாட்கள்

# சதம்... சரித்திரம்!

கு.ரம்யா
தி கோவை மெயில்

## பசுமையான மாநிலமாக தமிழகம் உருவெடுக்கும் !

–கார்த்திகேய சிவசேனாபதி, செயலாளர், சுற்றுசூழல் அணி, திமுக

மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் அனைவராலும் பாராட்டக்கூடிய வகையில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும், வளர்ச்சி பணிகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் கழக ஆட்சிப் பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்ததையொட்டி 'தி கோவை மெயில்' வார இதழுக்கு நான் அளித்த கருத்துகள்.

சுற்றுச்சூழல் நலன் காக்கும் நிதி நிலை அறிக்கை.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் இயங்கும் 'பருவநிலை மாற்ற இயக்கம்', தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் உற்பத்தியை 33% ஆக உயர்த்த 'தமிழ்நாடு பசுமை இயக்கம்' உருவாக்கம், பெரும் மரம் நடவுத் திட்டம் அடுத்த பத்தாண்டுகளில் செயல்படுத்தப்படும் போன்ற திட்டங்கள் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைத்து பரப்புரை செய்தேன்.













தொலைக்காட்சி நிகழ்வுகளில் பங்கேற்று பாசிச பாஜக எதிர்த்த போது





முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வீ.னி. காளியண்ணன் அவர்களின் பெயரை நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரிக்கு சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர்களிடம் முன்வைத்தோம். கல்வி வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு அளித்த அவருடைய சேவையைக் கருத்தில் கொண்டு, இந்த பெயரிடல் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினோம்.






சுற்றுச்சூழல் அணி தி.மு.க

மணிசுந்தர்
மாநிலத் துணை செயலாளர்

மதிப்பிற்குரிய மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு,

வணக்கம். கோவை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் மியாவாக்கி முறையில் குறுங்காடுகள் அமைக்கும் மாநகராட்சியின் முயற்சிக்கு திமுக சுற்றுச்சூழல் அணியின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இச்சிறப்பான பணியில் திமுக சுற்றுச்சூழல் அணியின் பங்களிப்பு நிச்சயம் இருக்குமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஏற்கனவே கடந்த சந்திப்பில் நாங்கள் உறுதி அளித்ததை போல 35 இடங்களில் குறுங்காடு வளர்க்கும் பணியை திமுக சுற்றுச்சூழல் அணி மேற்கொள்ளும்.

மாநகராட்சி செயற்பொறியாளர் திரு .ரவிச்சந்திரன் உடன் இணைந்து எந்தெந்த இடங்களில் இத்திட்டத்தை செயல்படுத்தலாம் என ஆய்வு செய்து அதனடிப்படையில் முதற்கட்டமாக சுமார் 30 இடங்களை தேர்வு செய்திருக்கிறோம். அதன் விபரங்களை இக்கடிதத்தின் பின் இணைத்துள்ளோம். மாநகராட்சியின் உதவியோடு இவ்விடங்களில் குறுங்காடு வளர்க்கும் பணியை திமுக சுற்றுச்சூழல் அணி மேற்கொண்டு மிகச் சிறப்பான முறையில் இக்காடுகளை வளர்த்தெடுக்கும் என்ற உறுதியையும் அளிக்கிறோம்.

ஏற்கனவே தாங்கள் குறிப்பிட்டதைப் போல இக்காடு வளர்க்கும் பணிக்கு மாநகராட்சியிடம் எதிர்பார்க்கும் உதவிகள்

1. JCB வண்டி
2. கம்பி வேலி
3. மக்கக்கூடிய குப்பைகள் தேவையான அளவு
4. தண்ணீர் வசதி
5. மின்சார வசதி

கோவை நகரை பசுமையாக மாற்றும் மாநகராட்சியின் முயற்சிக்கு திமுக சுற்றுச்சூழல் அணியின் பங்களிப்பு எப்போதும் இருக்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

இணைப்பு: தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களின் விவரம்

manisundarnallasamy@gmail.com | 98941 10509

கோவை மாநகராட்சிக்கு சொந்தமான நூறு இடங்களைத் தத்தெடுத்து மியாவாக்கி முறையில் குறுங்காடுகள் அமைக்க தன்னார்வலர்கள், அரசு சாரா நிறுவனங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் இவை தவிர்த்து கோவை பகுதிகளில் வசிக்கும் தனிநபர்கள் ஆகியோருக்கு மாநகராட்சி சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதைத்தொடர்ந்து கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பில் மாநில துணை செயலாளர் திரு. மணிசுந்தர் அவர்களின் தலைமையில் மொத்தம் 37 இடங்களைத் தேர்வு செய்து அங்கு குறுங்காடுகளை வளர்க்க திட்டமிட்டு மாநகராட்சி நிர்வாகத்திடம் அந்த பட்டியலை வழங்கியுள்ளோம்.





இந்திய நாட்டிலேயே அங்கீகரிக்கப்பட்ட கட்சி முதன்முறையாக சுற்றுச்சூழலுக்கு என்று தனியே அணி அமைத்து அதன் பாதுகாப்பிற்காக பணியாற்றி வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

தலைவர் திரு. மு க ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு பார்வையில் செயல்பட்டு வரும் சுற்றுச்சூழல் அணியின் விரிவாக்கம் நேற்று தொடங்கியது.

முதற்கட்டமாக சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 5 மாவட்டங்களுக்கான நிர்வாகிகளின் பட்டியலை சுற்றுச்சூழல் அணி மாநில துனை செயலாளர் திரு. R.P. செந்தில்குமார் அவர்கள் என்னிடம் வழங்கினார்.

திருப்பூரை சேர்ந்த இளைஞர்கள் பலர் இணைந்து "NATURE SOCIETY OF TIRUPUR" என்னும் அமைப்பை நடத்தி வருகிறார்கள். பள்ளி கல்லூரி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, குளங்கள், குட்டைகள் உள்ளிட்ட நீர்நிலைகளில் பணிசெய்வது, மரக்கன்றுகள் நடுவது என மிக அருமையான நற்பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களை நேரில் அழைத்து சுற்று சூழல் அணி உங்களில் சூழல் காக்கும் பணியில் துணை நிற்கும் என உறுதி அளித்தேன்.








கோவை மாவட்டம் சூலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வெவ்வேறு பகுதிகளில் மரக்கன்றுகள் நடும் விழாவினை சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பான 'பசுமை நிழல்' ஏற்பாடு செய்திருந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியில் கழக சுற்றுச்சூழல் அணியின் மாநில துணைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் வேலுச்சாமி அவர்களின் தலைமையில் சுமார் 500க்கும் மேற்பட்ட கழக உடன்பிறப்புகளுடன் ஊர்வலமாகச் சென்று தந்தை பெரியார் மற்றும் அறிஞர் அண்ணா ஆகிய தலைவர்களின் சிலைகளுக்கு மாலையிட்டு மரியாதை செலுத்தினோம்.



திருப்பூர் மாவட்டம் நல்லூர்பாளையத்தில் கழக சுற்றுச்சூழல் அணியின் மரக்கன்றுகள் நடும் விழா துவங்கப்பட்டுள்ளது.



தினகரன் 1/2

அனிதா நினைவு நாளையொட்டி

## ஒரு லட்சம் பனை விதைகள் நடவு

திமுக சுற்றுச்சூழல் அணி பங்கேற்பு

காங்கயம், செப். 4: அரியலூர் மாவட்டம் செந்துறை அருகேயுள்ள குழுமூரையில் நீட் எதிர்ப்புபோராளி அனிதாவின் 4ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இதில், அனிதாவின் குடும்பத்தினர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள், சுற்றுச்சூழல் ...



தங்கை அனிதாவின் 4-ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்குபெற்ற போது



திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவை கொண்டாடும் நோக்கில் காங்கயம், வள்ளியரச்சல், நல்லமாபுரம், சேமலவலசு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக 600 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.



கழக சுற்றுச்சூழல் அணி சார்பாக திருப்பூர் மாவட்டம் நஞ்சராயன் குளத்தில் 1000 மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.








புதுக்கோட்டை மாவட்டம், கற்பகச் சோலையில் வானகம் ஒருங்கிணைத்த நிகழ்வான ஐயா மரம் தங்கசாமி அவர்களின் மூன்றாமாண்டு நினைவேந்தல் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்தான கருத்தரங்கம் ஆகிய நிகழ்வுகளில் தலைமையேற்றுப் பங்காற்றினேன்.




காடுகளை அழிக்கும் புதிய வனச் சட்டத்தை எதிர்த்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, சட்ட வரைவை திரும்ப பெற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, மின்னஞ்சல் மூலம் எதிர்ப்பு தெரிவித்து, அதைத் திரும்ப பெற மக்கள் தாங்களே வலியுறுத்துமாறு கேட்டுக்கொண்டேன்.



திராவிட இயக்கத் தமிழர் பேரவை இளைஞரணி நடத்திய சமூக நீதி நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டேன்.



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, ஆண்டிபாளையம் பஞ்சாயத்து சார்பாக 300 மரக்கன்றுகள் நடப்பட்டன.



நேற்று அறிவாலயத்தில் கழகத் தலைவர் அவர்களை ஒரு லட்சம் விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்பு ஆணையை வழங்க ஆவணம் செய்ததற்கும் Made In Tamilnadu திட்டத்தினை உலகம் எங்கும் ஒலிக்க வேண்டும் என்று அத்திட்டத்தை ஊக்கப்படுத்துவதற்காகவும் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தேன்.



## தளபதி ந.அர்ச்சுனன் நூற்றாண்டு விழா சிறப்பாக நடத்தப்படும்

### தாராபுரம் கலந்துரையாடலில் கழகத் துணைத் தலைவர் அறிவிப்பு

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில், திராவிடர் கழக நிர்வாகிகள் பங்கேற்ற கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இதில், திரு. தளபதி அர்ஜுனன் அவர்கள் திராவிட இயக்கத்திற்கு ஆற்றிய பணிகள் மற்றும் கொங்கு மண்டலத்தில் திராவிடக் கொள்கைகள் வெறும் அடையாளங்களாக இருந்த காலத்தை மாறச் செய்த பங்களிப்புகளைப் பற்றி கலந்துரையாடி, அவரின் நூற்றாண்டு விழாவை ஏற்பாடு செய்ய தீர்மானம் நிறைவேற்றினோம்.



காங்கயம், வெள்ளகோவில் பகுதி விவசாயிகள் அவர்களை நேரில் சந்தித்து, அவர்கள் குறைகளை அறிந்து, கழக அரசு அவர்களுடன் துணை நிற்கும் என்று வலியுறுத்தினேன்,




கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.V.செந்தில் பாலாஜி அவர்கள் பங்கேற்று மக்கள் கோரிக்கைகளை கேட்டறிந்த கூட்டத்தில் கலந்து கொண்டேன்.




முரசொலி


# தி.மு.க. சுற்றுச் சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

## சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்டம் :

சென்னை வடகிழக்கு மாவட்டம்

சென்னை கிழக்கு மாவட்டம்

சென்னை மேற்கு மாவட்டம்

சேலம் மத்திய மாவட்டம்

சேலம் மேற்கு மாவட்டம்

நாமக்கல் கிழக்கு மாவட்டம்

நாமக்கல் மேற்கு மாவட்டம்

தருமபுரி மேற்கு மாவட்டம்

கார்த்திகேய சிவசேனாபதி



கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில் கழக சுற்றுச்சூழல் அணிக்கு புதிய மாவட்ட அமைப்பாளர்கள் நியமிக்க நேர்காணல் செய்து தேர்வு செய்யப்பட்டனர்.







மாநில மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள், ஒருங்கிணைத்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு கழக தலைவர் ஆட்சியில் தமிழக அடையும் பயன்களை மற்றும் அயராது சுற்றுச்சூழல் பணியில் ஈடுபடவும் கழக உடன்பிறப்புகளை வலியுறுத்தினேன்.







கழக இளைஞரணி செயலாளரும், சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று ஈரோடு மாவட்டம் பவானியில் மாபெரும் குதிரை ரேக்ளா போட்டிகள் நடத்தினோம்.



குமாரபாளையம் ஜல்லிக்கட்டு நிர்வாகிகள் உடன் இணைந்து குமாரபாளையம் ஜல்லிக்கட்டு ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடி , கழகம் எவ்வாறு நமது பரம்பரியத்தி போற்றி பேணுவதில் முனைப்பாக செயல்படுவதை எடுத்துரைத்தேன்.



கோவை மாவட்டம் சூலூர் நகரில் செயல்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டோம்.




கழக சுற்று சூழல் அணியின் செயல்பாடுகளை விரிவு செய்யும் நோக்கில், உலக வன வாழ்வு நிதித்துறையை (WWF) சார்ந்த அதிகாரிகள் உடன் எவ்வாறு இணைந்து செயல்பட இயலும் என கலந்துரையாடல் செய்தேன்.








திமுக
சுற்றுச்சூழல் அணி
குட்டப்பாளையத்தில் உள்ள நமது சுற்றுச்சூழல்
அணி தலைமை அலுவலகத்தில் நாட்டு
மரக்கன்றுகள் 493 என்ற எண்ணிக்கையில் உள்ளன.
தக்க பராமரிப்போடு வளர்க்க விருப்பம் உள்ளவர்கள்
அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புக்கு : 7373026456
கார்த்திகேய சிவசேனாபதி
மாநிலச் செயலாளர் - தி.மு.க சுற்றுச்சூழல் அணி
ksivasenapathy













மாண்புமிகு தலைவர் அவர்களின் ‘பசுமை தமிழ்நாடு‘ திட்டத்தின் கீழ், அடுத்த 10 ஆண்டுகளில் 33% வனப்பரப்பை அதிகரிக்கும் திட்டத்தை மக்களிடம் கொண்டு சேர்த்து, விழிப்புணர்வு ஏற்படுத்தினேன்.




கோவையில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டம் திமுக சார்பில் மாண்புமிகு தமிழக மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.V செந்தில் பாலாஜி அவர்களின் தலைமையில் செயற்குழு கூட்டம் கூட்டத்தில் கலந்து கொண்டு திராவிடத்தின், கழக ஆட்சி அமைக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் கழக உடன்பிறப்புகளுடன், எடுத்துரைத்தேன்



18-12-2021 முதல் 19-12-2021 வரை, ஈரோடு மாவட்ட கபடி ஒருங்கிணைப்பு குழுவுடன் இணைந்து, மாவட்ட அளவிலான ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி திருவிழாவை ஒருங்கிணைத்து, இளைஞர்களை கழக பணியில் இணைத்திட பரப்புரை மேற்கொண்டேன்.




மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் தொடங்கி வைத்த ‘மீண்டும் மஞ்சப்பை‘ விழிப்புணர்வு இயக்கத்தை முனிறுத்தி, திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல் மாவட்டங்களில் 1 இலட்சம் மஞ்சப்பைகள் விநியோகம் செய்து, சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் நெகிழி பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்கும் முயற்சியில் பரப்புரை மேற்கொண்டேன்.



**23 NOVEMBER 2020**



திருப்பூர் சார்பாக தமிழக மீட்போம்
தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில்
பங்குபெற்ற போது



திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக மக்களின்
மதசார்பின்மையை பேணி, போற்றிப் பாதுகாப்பதற்கான
முன்னுதாரணமாக செயல்பட்டு
வருகிறது. சென்னை லயோலா கல்லூரி அருகேயுள்ள
பிள்ளையார் கோவிலில் தலைவர் கலைஞர்
அவர்கள் திறந்து வைத்த கல்வெட்டு, போன்ற பலதரப்பட்ட
ஆதாரங்களைத் தலைவர் கலைஞர் அவர்களின் மத
நல்லிணக்கக் கொள்கைகளைப் பரப்புரை செய்த போது.



தமிழர் திருநாளான பொங்கல் திருநாளில் தமிழர் தம் உள்ளம் நெகிழ்ந்து, இல்லம் மகிழ்ந்திடத் தலைவர், மாண்புமிகு முதல்வர், தளபதி அவர்கள் 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் சிறப்புத் தொகுப்பை இன்று காலை வழங்கி, தொடங்கி வைத்தார்.











முதல்வர் தலைவர் தளபதியின் புதிய வேளாண் காடுகள் வளர்ப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் கழக துணைப்பொதுச்செயலாளர் திரு. அ. ராஜா MP , மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா.ராமசந்திரன், நீலகிரி கழக மாவட்டச் செயலாளர் திரு. முபாரக் அவர்களின் அறிவுறுத்தலின்படி குன்னூர் சட்டமன்றத் தொகுதியின் கீழ் கோத்தகிரி ஒன்றியத்தில் உள்ள பழங்குடி கிராமங்களான கம்பையூர், பாவியூர், மெட்டுகல், குடகூர், கரிக்கையூர், மல்லி கொப்பையூர், வக்னமரம் மற்றும் சாமை கூடலுக்குச் சென்றோம்.





கழக சுற்றுச்சூழல் அணியின் சென்னை மற்றும் திருவள்ளூர் மண்டலங்களுக்கான மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மாநிலச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தலைமையில் மாநில துணைச் செயலாளர் பழ.செல்லகுமார், முன்னிலையில் நடைபெற்றது. இதில் சுற்றுச் சூழல் அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கழக சுற்றுச்சூழல் அணியின் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக, சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த மாநிலமாவட்ட நிர்வாகிகள் காலாண்டு கூட்டம் நடைபெற்றது.







## புகார் மனு

தேதி:....................
வதம்பச்சேரி-சூலூர்

அனுப்புனர்
ஊர் பொதுமக்கள் சார்பாக
நல்லூர்பாளையம் கிராமம்
வதம்பச்சேரி அஞ்சல்
சுல்தான்பேட்டை வழி
சூலூர் தாலூக்கா
கோயம்புத்தூர் மாவட்டம்
அ.கு.எண் - 641669

பெறுநர்
உயர்திரு.கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள்
மாவட்ட செயலாளர்
தி.மு.க.சுற்றுச்சூழல் அணி
குட்டப்பாளையம்
திருப்பூர் மாவட்டம்

பொருள்: போக்குவரத்துக்கு இடையூறாக வாகணங்களை நிறுத்துவதை தடுக்கக்கோரி

ஐயா,

வணக்கம். வதம்பச்சேரி சொ.செ.ம.மேல்நிலைப்பள்ளி முன்பு விநாயகர் கோவில் அரசமரத்தடியிலும் நெல்லுக்குப்பம்மன் கோவில் முன்பும் போக்குவரத்துக்கு இடையூறாக வாடகை வேண்கள் மற்றும் கார்களை போக்குவரத்துக்கு இடையூறாக தொடர்ந்து நிறுத்தி வருகின்றனர். இதனால் நல்லூர்பாளையம் சாலையிலிருந்து வரும் வாகணங்களுக்கும் நல்லூர்பாளையம் செல்ல திரும்பும் வாகணங்களுக்கும் பெரும் இடையூறாக உள்ளது. பள்ளி முன்பு இப்படி வாகணங்கள் நிறுத்தப்படுவதால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகிறது. எனவே முறையற்று நிறுத்தப்படும் வாகணங்களை போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் நிறுத்த ஆவண செய்ய பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
வதம்பச்சேரி ஊர் பொதுமக்கள் சார்பாக
(வதம்பச்சேரி-சூலூர் 641669)

பொதுமக்கள் கையெழுத்து

கோயம்புத்தூர் சூலூர் வட்டம் வதம்பச்சேரி மற்றும் நல்லூர் பாளையம் கிராம மக்கள் 50-க்கும் மேற்பட்டோர், கடந்த 20 ஆண்டுகளாக பள்ளி மாணவர்கள், பொதுமக்கள், உழவர்கள் பயன்படுத்தும் சாலையில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி என்னை சந்தித்தனர்.தலைவர் தளபதியின் ஆணையும், அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி அவர்களின் ஆலோசனையும் பெற்ற பிறகு, இந்த கோரிக்கையை மாவட்ட ஆட்சியரிடம் மனுவாக அனுப்பினேன். தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறை, கோட்ட பொறியாளரின் ஆய்வுடன், ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கை மேற்கொண்டது.இதற்காக, பொதுமக்கள் முதல்வர், பொறுப்பு அமைச்சர், மற்றும் கழகத்துக்கு நன்றியை தெரிவித்தனர்.

மக்கள் நலப் பணிக்கு வாய்ப்பு வழங்கிய தலைவர் தளபதிக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.







2020 2025

அலுவலகம் கோவை -18.

கு.எண்: 11 /அ1/2021/ நாள் . 15.09.2021.

பொருள்- நெடுஞ்சாலைத்துறை கோவை (நெ) க(ம)ப கோட்டம் – சூலூர் (நெ) க(ம)ப, உட்கோட்டம் - வதம்பச்சேரி ஊராட்சி – நல்லூர்பாளையம் கிராமம் மேற்கு நுழைவு வாயில் முதல் மந்திரிப்பாளையம் செல்லும் சாலைகளில் எண்ணற்ற ஆக்கிரமிப்புகள் உள்ளதாகவும், அதனை அகற்றிடவும் தெரிவித்து வரப்பெற்ற மனு – நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை - மாவட்ட ஆட்சித்தலைவர், ஓ.மு. 16504/2021/ஆ2 நாள்:03.09.2021 ன் இணைத்து பெறப்பட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி, மாநில செயலாளர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்களது மனு, நாள் : 07.08.2021.

*******

பார்வையில் காணும் மனு நகல் இத்துடன் இணைத்து உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ), க(ம)ப, சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதில் கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், நல்லூர்பாளையம் கிராமம் மேற்கு நுழைவு வாயில் முதல் மந்திரிப்பாளையம் செல்லும் சாலைகளில் எண்ணற்ற ஆக்கிரமிப்புகள் உள்தாகவும், அதனால் விபத்துக்கள் ஏற்படுவதாகவும், மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றிடவும் தெரிவித்து திரு.கார்த்திகேய சிவசேனாபதி என்பவர் மனு அளித்துள்ளார்.

இவற்றின் மீது தக்க நடடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ) க(ம)ப, சூலூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு - பார்வையில் காணும் மனு நகல்

ஒம்/- அ.மாதேஸ்வரன்.<br>
கோட்டப் பொறியாளர் (நெ),<br>
க(ம)ப கோட்டம், கோவை-18.

பெறுநர்<br>
உதவிக் கோட்டப் பொறியாளர் (நெ) க(ம)ப, சூலூர்.

நகல் - உதவிப் பொறியாளர் (நெ) க(ம)ப , சூலூர்.

நகல் - திரு. கார்த்திகேய சிவசேனாபதி,<br>
மாநில செயலாளர்,<br>
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி,<br>
சாமிநாதன் இல்லம், குட்டப்பாளையம்,<br>
காங்கேயம் வட்டம், திருப்பூர் வட்டம் - 638 108.

/உண்மை நகல்/உத்திரவின்படி/அனுப்பப்படுகிறது/

கோட்டக்கணக்கர். 15/9/21

15/9/21

---

டாக்டர்.ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப.,<br>
மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>
கோயம்புத்தூர்.

கோட்டப் பொறியாளர்,<br>
நெடுஞ்சாலைத் துறை,<br>
கோயம்புத்தூர்.

ஓ.மு.16504/2021/ஆ2 நாள்:03.09.2021

ஐயா,

பொருள் : ஆக்கிரமிப்பு - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம் - வதம்பச்சேரி ஊராட்சி - நல்லூர்பாளையம் கிராமம் மேற்கு நுழைவு வாயில் முதல் மந்திரிப்பாளையம் செல்லும் சாலைகளில் எண்ணற்ற ஆக்கிரமிப்புகள் உள்தாகவும், அதனை அகற்றிடவும் தெரிவித்து வரப்பெற்ற மனு - நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை : தி.மு.க. சுற்றுச்சூழல் அணி, மாநில செயலாளர் திரு.கார்த்திகேய சிவசேனாபதி என்பவரது மனு, நாள்:07.08.2021

------------

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், நல்லூர்பாளையம் கிராமம் மேற்கு நுழைவு வாயில் முதல் மந்திரிப்பாளையம் செல்லும் சாலைகளில் எண்ணற்ற ஆக்கிரமிப்புகள் உள்தாகவும். அதனால் விபத்துக்கள் ஏற்படுவதாகவும், மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றிடவும் தெரிவித்து திரு.கார்த்திகேய சிவசேனாபதி என்பவர் பார்வையில் காண் மனு அளித்துள்ளார்.

மேற்படி மனு அசலாக இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இவற்றின் மீது தக்க நடவடிக்கை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது. மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை நேரிடையாக மனுதாரருக்கு அனுப்பி, அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: அசல் மனு.

தங்கள் நம்பிக்கையுள்ள,

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,<br>
கோயமபுத்தூர்.

நகல்:<br>
1.வட்டாட்சியர்,<br>
சூலூர்.

2.திரு. கார்த்திகேய சிவசேனாபதி,<br>
மாநில செயலாளர்,<br>
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி,<br>
சாமிநாதன் இல்லம், குட்டப்பாளையம்,<br>
காங்கேயம் வட்டம், திருப்பூர் வட்டம்-638 108.

----(மேற்காண் பொருள் தொடர்பாக கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத்துறை, கோட்டப்பொறியாளரை அணுகி தெரிவிக்கப்படுகிறது).

DESPATCHING CLERK<br>
COLLECTOR'S OFFICE<br>
COIMBATORE - 641 018.

---

நெடுஞ்சாலைத்துறை

அனுப்புநர்<br>
திரு.க.மோகன்.பி.இ.,<br>
உதவிப்பொறியாளர்,<br>
நெடுஞ்சாலைத்துறை,<br>
கட்டுமானம் (ம) பராமரிப்பு,<br>
கல்தான்பேட்டை.

பெறுநர்<br>
[illegible]

கடிதஎண்: 04/2020-21/உ.பொ/நாள்:20/01/2022

அய்யா,

பொருள் : பொள்ளாச்சி (நெ), க(ம)ப கோட்டம் - கிணத்துக்கடவு(நெ).க(ம)ப உட்கோட்டம் - நல்லூர்பாளையம் - V.மேட்டூர் - (காமநாயக்கன்பாளையம்) முதல் வதம்பச்சேரி, நல்லூர்பாளையம் வரை உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரிய மனு - தொடர்பாக

பார்வை : நா.மோகன்ராஜ்.(ஊர் பொது மக்கள் சார்பாக), 5/381 வடக்காட்டு வயல், நல்லூர்பாளையம், வதம்பச்சேரி (அஞ்சல்),கல்தான்பேட்டை வழி,சூலூர் வட்டம்,கோவை மாவட்டம்.அவர்களின் கடித நாள்:06-12-2021

********

பார்வையில் காணும் கடிதத்தின்படி காமநாயக்கன்பாளையம் நால்ரோடு அதாவது V.மேட்டூர் (வதம்பச்சேரி ஊராட்சி) பகுதியிலிருந்து வடுகபாளையம் வழியாக வதம்பச்சேரி செல்லும் சாலையில் நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான சாலை ஓரங்களில் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் பொதுமக்களுக்கும் , போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதால் அவற்றை உடனடியாக அகற்றுமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடங்களில் ஆக்கிரமப்புகள் செய்யப்பட்டுள்ள நபர்கள் இக்கடிதம் கிடைக்கப்பெற்ற 7 நாட்களுக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட நாட்களுக்குள் ஆக்கிரமப்பு செய்துள்ளதை அகற்ற தவறும் பட்சத்தில் நெடுஞ்சாலைத்துறை மூலம் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், ஆக்கிரமப்புகளை நெடுஞ்சாலைத்துறை மூலம் அகற்றப்படும் பட்சத்தில் ஏற்படும் இழப்பீடுகளுக்கு இத்துறை எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

20/1/22

உதவிப்பொறியாளர்,(நெ),<br>
க(ம)ப, கல்தான்பேட்டை.

நகல்: உதவிக்கோட்டப்பொறியாளர் (நெ), க (ம) ப, கிணத்துக்கடவு அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.







திருச்செங்கோட்டில்

## திமுக சுற்றுச்சூழல் அணி அலுவலக திறப்பு விழா



▶ மாநில சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சேனாபதிக்கு மாவட்ட செயலாளர் மூர்த்தி பாராட்டு தெரிவித்தார்.

**திருச்செங்கோடு, ஜன.23:** நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணி மாவட்ட அலுவலக திறப்பு விழா திருச்செங்கோட்டில் நடந்தது. மேற்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான மூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஊஞ்சபாளையம் ரவிச்சந்திரன் வரவேற்றார். துணை செயலாளர் நாராயணமூர்த்தி, உசிலம்பட்டி அருண், நகர திமுக பொறுப்பாளர் கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர் வட்டூர் தங்கவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்து விளக்கேற்றி பேசினார்.

விழாவில் ஒன்றியக்குழு தலைவர் சுஜாதா தங்கவேல், துணை சேர்மன் ராஜபாண்டி ராஜவேலு, ஒன்றிய கவுன்சிலர்கள் ரியா, செல்வராஜ், இளைஞரணி அமைப்பாளர் மதுரா செந்தில், மாணவரணி அமைப்பாளர் ஜிஜேந்திரன், நெசவாளரணி அமைப்பாளர் சரவணமுருகன், மௌளசிராஜமாணிக்கம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் அருண்குமார், தாமரைச்செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




மீண்டும் மஞ்சப்பை‘ கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக வழங்கப்பட்டு வருகிறது அதன் செய்தி சன் செய்தி தொலைகாட்சியில் வந்துள்ளது.






சென்னை தென்மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் சார்பில், நிர்வாகி திரு. வேல் ராஜன் அவர்களின் ஏற்பாட்டில் குடியரசு தின நாளில் மந்தைவெளி பகுதியில் மரக்கன்றுகள் நடுதல் மற்றும் பள்ளிக்குழந்தைகளுக்கு புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுமக்களுக்கு மஞ்சப்பை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தியது மகிழ்ச்சி அளிக்கின்றது.




மொழிப்போர் தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை வடசென்னை பகுதியில் அமைந்துள்ள திரு. தாலமுத்து மற்றும் திரு. நடராசன் அவர்களின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினோம்.









தென்சென்னை கழக சுற்றுச்சூழல் அணியின் அலுவலகத்தையும், அதனுடன் இணைந்த தலைவர் கலைஞர் நூலகம், மற்றும் தலைவர் தளபதி கணினி மையம் ஆகியவற்றை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மதிப்பிற்குரிய அண்ணன் திரு. மா சுப்பிரமணியன் அவர்கள் திறந்து வைத்தது பெரு மகிழ்ச்சி அளிக்கின்றது.

'தலைவர் கலைஞர்' பெயரால் இயங்க இருக்கும் நூலகத்திற்கு என்னால் இயன்ற 1000 புத்தகங்களை வழங்கியது மன மகிழ்வைத் தருகின்றது.



திமுக. 1.அமமுக. அதிமுக. முன்னாள் அமைச்சர் டினர்.

என்.ஆர்.இளங்கோ எம்.பி. சிறப்புரை!

# கழக சுற்றுச்சூழல் அணிக் கூட்டம்!

## மாநில நிர்வாகிகள் பங்கேற்பு!

TAMIL NADU MINERALS LIMITED

NOTICE INVITING e-TENDER



சென்னை அண்ணா யுனிவர்சிட்டி அலுமினி கிளப்பில் திமுக சுற்றுச்சூழல் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்து, அணியின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் எதிர்வரும் திட்டங்கள் குறித்து உரையாற்றினேன்.

சிறப்பு விருந்தினராக திமுக சுற்றுச்சூழல் அணியின் மாநில சட்ட ஆலோசகரும் மூத்த வழக்கறிஞருமான திரு. என்.ஆர். இளங்கோ எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு 'சூழலியலில் சட்ட உரிமைகள்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.









திமுக சுற்றுச்சூழல் அணியின் மாநில துணைச் செயலாளர் திரு. நாராயண மூர்த்தி அவர்கள், கடந்த ஓர் ஆண்டுக்கான திருப்பூர், கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த சுற்றுச்சூழல் பணிகளின் ஆய்வறிக்கையை வழங்கினார். அந்த அறிக்கையின் அடிப்படையில், அணியின் செயல்திறனை மதிப்பீடு செய்து, எதிர்கால திட்டங்களை வடிவமைத்தேன்.



சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க சேவையாற்றி விருது பெற்ற திரு. அசோக் அவர்கள், சத்தியமங்கலம் மற்றும் கோவை பகுதிகளில் பாம்பு, பூச்சி, யானை, புலி, சிறுத்தை போன்ற வனவிலங்குகளுக்கு அறுவை சிகிச்சை மற்றும் கண் சிகிச்சை அளித்து அவற்றை காப்பாற்றியவர். அவரை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்தோம்.



திருப்பூர் மாநகராட்சியின் மேயர் திரு. தினேஷ் அவர்களை சந்தித்து திருப்பூரில் உள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் திருப்பூரை வனமாக மாற்றுவது கலந்துரையாடினோம்.



சமூக நீதி காவலர் மரியாதைக்குரிய கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 69வது பிறந்தநாளை முன்னிட்டு 3000 மரக்கன்றுகள் , இனிப்புகள் மற்றும் நெகிழிப் பையைத் தவிர்க்கும் விதமாக 'மீண்டும் மஞ்சப்பை' திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் பழையகோட்டைபுத்தூரில் உள்ள பள்ளி குழந்தைகளுக்கும் , குட்டப்பாளையம், சேமலை வலசு, ஊஞ்சமரம் கிராம பொதுமக்களுக்கு வழங்கி சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தினோம்.



சென்னிமலையைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட இளைஞர்கள், தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு, கழக சுற்றுச்சூழல் அணி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் திரு. கவின் மோகன் மற்றும் கழக உடன்பிறப்புகள் உடனிருந்தனர்..




தலைவர் வரும் பத்து ஆண்டுகளுக்குள் 24% இருந்து 33% பசுமை மிகுந்த மாநிலமாகத் தமிழகம் உருவாகும் எனச் சட்டசபையில் அறிவித்துள்ளார். அதன் ஒருபகுதியாகச் சுற்றுச்சூழல் அணி தமிழகம் முழுவதும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றோம்.









கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான தளபதி அவர்களின் 69-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, ராணிப்பேட்டை மாவட்டத்தில், தமிழக அரசின் தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத் துறையும், கழகச் சுற்றுச்சூழல் அணியின் மாநில துணைச் செயலாளரும், ஜிகே உலக பள்ளியின் இயக்குநருமான திரு . வினோத் காந்தி அவர்களின் ஏற்பாட்டில் இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகம் & வேலைவாய்ப்பு துறை நடத்திய வேலைவாய்ப்பு முகாமில் 523 மாற்றுத்திறனாளிகள் உட்பட 26,641 பேர் கலந்துகொண்டனர்.









ஈரோடு வடக்கு மாவட்ட திமுக சுற்றுச்சூழல்
அணியின் மாவட்ட அமைப்பாளர்
திரு. K K செல்வன் சார்பில்,
மாண்புமிகு தமிழக முதல்வரின்
69 பிறந்தநாளை முன்னிட்டு கொடிவேரி
பெரிய அணையின் கரையில்
10,000 நாட்டு மரக்கன்றுகள் நடும்
விழா இன்று நடைபெற்றது

# இலவச மருத்துவ முகாம்



▶ சிவன்மலையில் நடந்த இலவச மருத்துவ முகாமில் சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவ சேனாபதி கலந்துகொண்டு மரக்கன்றுகள் வழங்கினார்.

காங்கயம்,மார்ச்19:காங்கயம் அருகே சிவன்மலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணி மற்றும் ஆதார் மருத்துவமனை சார்பில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. திமுக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்தார். முகாமில் கர்ப்பபை மற்றும் மாதவிடாய் பிரச்னை, வயிற்று வலி, லேப்ராஸ்கோப் அறுவை சிகிச்சைகள், சிறுநீரக கல், பித்தப்பை, மூட்டு வலி ஆகியவற்றிற்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டது. இதில் காங்கயம் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த சுமார் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு மருந்துகள்,மாத்திரைகள் மற்றும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஜவகர், மாநில துணை செயலாளர் நாராயணமூர்த்தி,வடக்கு ஒன்றிய செயலாளர் சிதம்பரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இன்றைய முரசொலி நாளிதழில் கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக வெளிவந்துள்ள செய்திகள்.




தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்களின் 69 பிறந்தநாள் தொடர் நிகழ்வாகத் திருப்பூர் கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் திரு . ஜவகர் அவர்களின் ஏற்பாட்டில் இன்று திருப்பூர் கிழக்கு மாவட்டம் காங்கேயம் சிவன் மலை ஊராட்சியில் திருப்பூர் கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மற்றும் திருப்பூர் ஆதார் மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் மற்றும் ரத்ததான முகாம் நடைபெற்றது.









கோவையைச் சார்ந்த ரோட்ராக்ட் குழு நடத்திய கலந்தாய்வுக் கூட்டத்திற்குச் சிறப்பு அழைப்பாளராகச் சென்றிருந்தேன். சுமார் 500 மாணவ மாணவிகள் கலந்துகொண்ட நிகழ்வில் 'யாதும் ஊரே யாவரும் கேளீர் ' மற்றும் 'இளைய தலைமுறையே' என்கின்ற தலைப்பில் பேசினேன்.



காங்கயம் GS உடற்கல்வியியல் கல்லூரியை சேர்ந்த மாணவ மாணவிகள் மாநிலச் செயலாளர் அலுவலகத்திற்கு உடற்பயிற்சி மற்றும் கிராம சீரமைப்பு விழிப்புணர்வு பெறுவதற்காக வந்து இருந்தனர். கிராம மக்களின் வாழ்க்கை முறை, விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த விடயங்களைப் பற்றி விவரித்தேன்.



மாண்புமிகு தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் கழக அரியலூர் மாவட்டச் செயலாளர் திரு. S S சிவசங்கர் அவர்களுக்குக் கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாகப் நல்வாழ்த்துக்கள்



மாண்புமிகு தமிழக மின்சாரத்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி அவர்கள் தலைமையில் கோவையில் கழக ஒருங்கிணைந்த மாவட்டம் சார்பாக பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்காக வருகை தந்த சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது.










தமிழக முதல்வர் தலைவர் தளபதியின் அறிவுரையில்,
3000 மரக்கன்றுகள் நடும் திருவிழா!!! 03-04-2022 ஞாயிற்றுக்கிழமை, அன்னூர் காட்டம் பட்டியில் உள்ள குன்னத்தூர் குளக்கரையில் கோவை குளங்கள் பாதுகாப்பு அமைப்பு மற்றும் வளர் இளம் அமைப்பினரின் ஒருங்கிணைப்பில் கோவை,North Round Table20,Rotary Club of Coimbatore,Rotary Club of Coimbatore Smart City அவர்களின் நிதியுதவியுடன், காட்டம் பட்டி ஊராட்சி, குன்னத்தூர் ஊராட்சி மற்றும் ஊர் பொதுமக்கள் உதவியுடன் 3000 மரக்கன்றுகள் நடும் திருவிழா நடைபெற்றது.

# 5000 saplings distributed



**ERODE, APR. 7:** Maha Mariamman Temple Kumbabhishekam ceremony was held at Ellapalayam in Erode yesterday. As part of the event, the DMK Environment Team distributed 5000 saplings to devotees and the public. Ellapalaiyam Sivakumar, District Organizer of the DMK Environment Team presided over the function. Secretary of State for Environment Karthikeya Sivasenadhipathi was the special guest.

He spoke on increasing the forest cover of the state to 33 percent and the ways to protect the environment. The event was attended by Deputy Mayor of Erode Corporation Selvaraj, District Youth Wing Secretary Prakash, 5th Ward Councilor Kavusalya and many others.

எல்லப்பாளையம் ஊரில் அமைந்துள்ள அம்மன் கோவிலில் குடமுழுக்கு திருவிழாவில் கலந்துகொண்டதில் மகிழ்ச்சி. மேலும் கழக சுற்றுச்சூழல் அணியின் ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர் எல்லப்பாளையம் திரு. சிவக்குமார் அவர்களின் ஏற்பாட்டில் குடமுழுக்கு விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் மரக்கன்றுகள் மற்றும் மஞ்சப்பை வழங்கினோம்.













12.4.22 அன்று சத்தியமங்கலம் நகராட்சியில் அமைக்கப்பட்டிருக்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பான அனைத்து கட்சி கூட்டத்தில் கருத்துரை ஆற்றி விவாதத்தில் பங்கேற்றேன்.




0-4-2022 அன்று திராவிட இயக்கமும், சமூக நீதியும் தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கான பாராட்டு நிகழ்வு, புஞ்சை புளியம்பட்டியில் நடைபெற்றது.




2022 April










பண்டைய தமிழ்க் கலாச்சாரத்தில் அடங்கிய தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டு, ‘உடுமலை வரலாற்று ஆய்வு நடுவம் அறக்கட்டளை‘ சார்பில் திரு. அருட்செல்வன் அவர்கள் சந்தித்து, ‘தென்கொங்கின் தொன்மங்கள்‘ என்ற நூலை வெளியிட்டு சிறப்புரை ஆற்றியதில் மகிழ்ச்சி.




மருத்துவர் திருமதி. சசித்ரா தாமோதரன் அவர்கள் எழுதிய மூன்று நூல்களை கோவையில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் ஆடிட்டோரியத்தில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியிட்டதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். உலக புத்தக தினத்தன்று இப்புத்தகங்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி.




18-வது திருப்பூர் புத்தகத்திருவிழாவில் நடைபெற்ற புதிய தலைமுறை தொலைக்காட்சியின் வட்டமேசை விவாதம் நிகழ்ச்சியில் கலந்துரையாடினேன்.











டெல்லியில் போராடிக் கொண்டு இருந்த விவசாயிகளுக்கு, அவர்களுக்கான இயன்ற உதவிகளைச் செய்யும் வாய்ப்பு அமைந்ததில் மகிழ்ச்சி



நாடு போற்றும் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் கழக அரசின் ஓராண்டு நிறைவு தினமான இன்று, இந்நாளை சிறப்பிக்கும் விதமாகக் கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாகக் கோவை வடவள்ளி பகுதியில் உள்ள OSR நிலத்தில் மியாவாக்கி (அடர்வன காடுகள்) முறையில் மரக்கன்றுகளை நடவு செய்தோம். மேலும் நாற்பது இடங்களில் கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக அடர்வன பூங்கா உருவாக்கினோம்.













ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்ட விவசாயிகள் வாழ்வாதாரமாக நம்பி இருப்பது கீழ் பவானி வாய்க்கால். 2012-ம் ஆண்டு இதனை கான்கிரீட் செய்து நீரை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் திட்டம் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டது. 2020-ல் அதே திட்டம் புதுப்பெயரில் மீண்டும் கொண்டு வரப்பட்டதும், 35,000 விவசாயிகள் பெருந்துறையில் கவன ஈர்ப்பு மாநாடு நடத்தினர். இதற்கு திராவிட முன்னேற்றக் கழக சுற்றுச்சூழல் அணியின் மாநில செயலாளர் மற்றும் விவசாயி என்ற முறையில் ஆதரவளித்தேன். பின்னர் சென்னையில் அமைச்சர்கள் திரு. முத்துசாமி மற்றும் திரு. துரைமுருகன் ஆகியோரை 45 விவசாய பிரதிநிதிகள் சந்தித்து விவசாயிகளின் நிலைமையை விளக்கினோம். அமைச்சர் அவர்கள் விவசாயிகள் விருப்பத்திற்கு எதிரான நடவடிக்கைகள் இருக்காது என்றும், நல்ல முடிவு எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தனர். தலைவர் தளபதி தலைமையிலான அரசுக்கு, விவசாயிகள் சார்பாக நன்றியை தெரிவித்தோம்.












திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய நமக்கான அடையாளம் திராவிட மாடல் மண்டல மாநாட்டில் கலந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகள் மற்றும் சமூகநீதி, கல்வி, நலத்திட்டங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கழகம் மேற்கொண்ட முக்கிய முயற்சிகளைப் பற்றிய சிறப்புரையை ஆற்றினேன்









கோவை மாநகரில் நடைபெற்ற பெண் தொழில் முனைவோருக்கான EXPO 2022 நிகழ்வில் பங்கேற்றதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தோம். இந்தியாவிலேயே பெண் தொழில் முனைவோர் அதிகமாக உள்ள மாநிலம் தமிழகம் என்பதை வலியுறுத்தினோம்.1960-ஆம் ஆண்டுகளிலிருந்து காமராஜர், அண்ணா, கலைஞர் ஆகிய திராவிட இயக்கத் தலைவர்கள் பெண்களின் உயர்கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு வழங்கிய அரசியல், சமூக நன்மைகள் குறித்து விழாவில் விரிவாக உரையாற்றினோம்.







ஈரோடு மாவட்ட இளநிலை பேராசிரியர் படிப்பு வட்டம் மற்றும் கருஞ்சட்டை பதிப்பகத்தின் மூன்று நூல்களின் அறிமுக விழா, ஈரோடு பெரியார் அரங்கில் நடைபெற்றது. பேராசிரியர் சுபவீ ஐயா எழுதிய ‘போராட்டங்கள்‘ எனும் புத்தகத்திற்கு விளக்கவுரை வழங்கி, நிகழ்வில் பங்கேற்றதில் மகிழ்ச்சி.









முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளினை முன்னிட்டு

கழக சுற்றுச்சூழல் அணி சார்பில் தமிழகம் முழுவதும் மரக்கன்றுகள் நடும் விழா!

கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

கோவை, மே 17-

கழக சுற்றுச்சூழல் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளினை முன்னிட்டு "மியாவாக்கி" முறையில் தமிழகம் முழுவதும் நாட்டு மரக்கன்றுகள் மற்றும் பழ மரக்கன்றுகள் ஆகியவற்றைக் கொண்டு அடர்வன குறுங்காடுகள் அமைத்திட மிஷன் மியாவாக்கி என்னும் பெயரில் ஒரு புதிய முயற்சியினை சுற்றுச்சூழல் அணி முன்னெடுத்துள்ளது.

இத்திட்டம் குறித்து கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவ சேனாபதி அறிக்கையில் கூறியதாவது :-

சங்ககாலம் தொட்டே இயற்கையோடு இணைந்த வாழ்வியலைக் கொண்டது தமிழ் நிலம். மரபும், மரபுசார் செயல்முறைகள் என ஒவ்வொன்றிலும் "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி" தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெளிவு. மாறி வரும் நாகரிகியச் சூழலும், அதிகரிக்கும் நகரமயமாதல் ஆகியவை காரணமாகவும், நமது சுற்றுச்சூழலைப் பேணிக்காப்பது "இன்றைக்கு மட்டுமல்ல வரும் தலைமுறைக்காகவும் மிகவும் அவசியம்" என தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். அதற்காக பல்வேறு பணிகளைச் செயல் திட்டங்களை அறிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளினை முன்னிட்டு "மியா வாக்கி" முறையில் நம் தமிழ்நாடு முழுவதும் நாட்டு மரக்கன்றுகள் மற்றும் பழ மரக்கன்றுகள் ஆகியவற்றைக் கொண்டு அடர்வன குறுங்காடுகள் அமைத்திட (மிஷன் மியாவாக்கி) என்னும் பெயரில் ஒரு புதிய முயற்சியினை கழக சுற்றுச்சூழல் அணி முன்னெடுத்துள்ளது.

நகரப்பகுதிகளிலும், ஊரகப்பகுதிகளிலும் காலியாக உள்ள சிறிய அளவிலான இடங்களில் கூட "மியாவாக்கி" முறையில் 8 மரக்கன்றுகளை நெருக்கமாக நடவு செய்து பொதுமக்கள் பங்களிப்போடு அடர் வன குறுங்காடுகள் அமைப்பதே (மிஷன் மியாவாக்கி)" திட்டத்தின் நோக்கமாகும். இதன் முதல் கட்டமாக சட்ட மன்ற உறுப்பினர்கள், தங்கள் தொகுதிக்கு உட்பட்ட இடங்களில், ஏதேனும் 3 இடங்களைத் தேர்வு செய்து மியவாக்கி முறையில் அடர்வன குறுங்காடுகளைப் பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள், சேவை அமைப்புகள், சமூகப் பொறுப்பு கொண்ட தொழில் நிறுவனங்கள் எனப் பலதரப்பினரையும் இணைத்து உருவாக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மக்கள் முன்னெடுப்பில் அடர்வன மியவாக்கி முறையில் குறுங்காடுகளை உருவாக்க, தேவையான ஆலோசனைகள், செயல் திட்டங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உருவாக்கச் சுற்றுச்சூழல் அணி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் துணை புரியும். மாநிலத்தின் பசுமை பரப்பினை எளிதாக அதிகரிக்கவும், சுற்றுச்சூழல் மேம்பாட்டில் அனைவரது பங்களிப்பினையும் மனமார வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மிஷன் 'மியாவாக்கி' திட்டம் துவக்கம்

தி.மு.க., சுற்றுச்சூழல் அணி அறிவிப்பு

காங்கேயம், மே 14–

'மியாவாக்கி' முறையில், நாட்டு மரக்கன்று மற்றும் பழ மரக்கன்றுகளை கொண்டு, அடர் வன குறுங்காடுகள் அமைக்க, தி.மு.க., சுற்றுச்சூழல் அணி திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அணியின் மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி கூறியதாவது: மாறி வரும் சூழல், அதிகரிக்கும் நகரமயமாதலால், நமது சுற்றுச்சூழலை பேணிக்காப்பது வரும் தலைமுறைக்காக மிகவும் அவசியம். இதற்காக பல்வேறு பணிகளை செயல் திட்டங்களாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதன்படி முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு 'மியா

மரக்கன்றுகள் நட்டு, அடர் வன குறுங்காடுகள் அமைத்திட (மிஷன் மியாவாக்கி) என்னும் பெயரில், புதிய முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

இதன்படி நகர மற்றும் ஊரக பகுதிகளில், காலியாக உள்ள சிறு இடங்களில் கூட, "மியவாகி" முறையில் எட்டு மரக்கன்றுகளை நெருக்கமாக நடவு செய்து, மக்கள் பங்களிப்போடு அடர்வன குறுங்காடுகள் அமைப்பதே இதன் நோக்கமாகும்.

இந்த முறையில் குறுங்காடுகளை உருவாக்க, தேவையான ஆலோசனை, செயல் திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்க சுற்றுச்சூழல் அணி, அனைத்து சட்டசபை உறுப்பினர்களுக்கும் துணை புரியும்.

சுற்றுச்சூழல் மேம்பாட்டில் அனைவரது பங்




சங்ககாலம் தொட்டே தமிழ் மக்கள் இயற்கையோடு இணைந்து, மரபு மற்றும் மரபுசார் செயல்முறைகளுடன் வாழ்ந்து வந்தது தெளிவாகத் தெரிகிறது. நகரமயமாதலால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாற்றங்களை எதிர்கொள்வதற்காக, 'இன்றைக்கு மட்டுமல்ல, வரும் தலைமுறைக்கும் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும்' என மாண்புமிகு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதை அடிப்படையாகக் கொண்டு, கழக சுற்றுச்சூழல் அணியின் மூலம் மிஷன் மியாவாக்கி திட்டம் முன்னெடுக்க திட்டமிடப்பட்டது.











விருதுநகர் மாவட்டம் வத்ராப் அருகே உள்ள கோட்டையூர் கிராமத்தில், மரம் நடும் விழா மற்றும் குளங்கள் தூய்மை செய்வது, குறுங்காடுகள் அமைத்து போன்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு பணிகளை துவக்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்வின் போது, மாணவர்கள் மற்றும் இளைஞர்களை ஊக்குவித்து, கலப்பணிகளில் ஈடுபடச் செய்தோம்.









மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் இரண்டாண்டு சாதனைகளை முன்னிலைப்படுத்தும் சிறப்பு கூட்டம் மேட்டுப்பாளையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, தலைவர் அவர்களின் சாதனைகளை மக்களிடமும் கழக உடன்பிறப்புகளிடமும் எடுத்துரைத்தோம்.





திமுக சுற்றுச்சூழல் அணியின் துணைச் செயலாளர் திரு. மணி சுந்தர், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் ஆகியோருடன் தமிழக வீட்டு வசதித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. முத்துசாமி அவர்களைச் சந்தித்தோம். இந்த சந்திப்பில், திடக்கழிவு மேலாண்மை, பசுமை பரப்புகள் விரிவாக்கம் மற்றும் அடர்வனம் அமைப்பது குறித்தும், வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒரு விரிவான திட்டம் வழங்கி, அதை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல் நடைபெற்றது.



திமுக சுற்றுச்சூழல் அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் குட்டப்பாளையம் கிராமத்தில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.




May 2022



கோவைக்கு வருகை புரிந்த தமிழ் இனத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களை வரவேற்ற போது.





நீலகிரி மாவட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டு வரும் மாசு, லாந்தனி, மைகானியா வகை பயிர்களின் ஊடுருவல் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை பாதுகாப்பு உள்ளிட்ட முக்கியமான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. ரசா அவர்களுடன் விரிவாக கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த சந்திப்பின் போது, நீலகிரியின் இயற்கை வாழ்வியல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழல் நலன்கள் எப்படி பாதிக்கப்படுகின்றன என்பது குறித்து ஆழமான பார்வையுடன் விவாதிக்கப்பட்டது. மேலும், இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் அரசு மற்றும் சமூக நல அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தேன்.



தமிழ் நிலம் சங்ககாலத்திலிருந்தே இயற்கையோடு இணைந்த வாழ்வியலை பின்பற்றியதைக் கருத்தில் கொண்டு, கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மண்டலங்களில் குறுங்காடு அமைக்கும் திட்டம் நடைமுறையில் தொடங்கப்பட்டது.

இத்திட்டம், மாநில துணைச்செயலாளர் திரு. வினோத் காந்தி அவர்களின் ஏற்பாட்டில், மாண்புமிகு அமைச்சர் திரு. காந்தி, முன்னாள் மத்திய அமைச்சர் மற்றும் அரக்கோணம் எம்.பி. திரு. ஜெகத்ரட்சகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகளின் முன்னிலையில் தொடங்கப்பட்டது.








உடுமலைப்பேட்டை தளி கிராமத்தைச் சேர்ந்த மொழி ஆர்வலரும், இலக்கியத் தேடலில் ஈடுபட்டிருக்கும் முனைவர் சித்ரா மகேஷ் அவர்கள், தற்போது அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் டாலஸ் நகரில் வாழ்ந்து வருகிறார். அவர்கள் புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்று வாழ்த்துகளை தெரிவித்தோம்.



கலைஞர் 100 கொண்டாடும் நிகழ்வில் ஒரு பகுதியாகக் கழக சுற்றுச்சூழல் அணியின் மதுரை மண்டல பொறுப்பாளர் கழக சுற்றுச்சூழல் அணியின் மாநில துணைச்செயலாளர் சார்பாக ஒரு நாற்றுப்பண்ணை உருவாகி வருகிறது. இதுவரை 80,000 மரக்கன்றுகளும் இரண்டு லட்சம் பைகளில் நமது நாட்டின விதைகள் விதைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனை பார்வையிட சென்ற போது.



கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக தி ஹிந்து நாளேட்டின் ஜூன் மாதம் 25 ஆம் தேதி வெளிவந்த மிக முக்கியமான சுற்றுச்சூழல் அம்சங்களைக் கொண்ட பத்திரிக்கையை Sakthi Alloys நிறுவனம் திரு தமிழரசன் அவர்கள் நமக்கு அன்பளிப்பாக்க வழங்கினார் அதனை மாணவர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்று நிறுவனத்தின் உயர்ந்த நோக்கத்தைப் பாராட்டி,முத்தூர் ஆனூர் வித்தியாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வெள்ள கோவில் பாலா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மற்றும் காங்கேயம் ராஜ ராஜேஸ்வரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கும் சென்று கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக இந்த பத்திரிக்கைகளை மாணவர்களுக்கு வழங்கினோம்



கரூர் மாநகரில் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் மற்றும் ஏர் முனை இளைஞர் அணி ஏற்பாட்டில் உழவர் தின பேரணி மற்றும் கோரிக்கை மாநாடு பங்கு பெற்ற போது



கழக இளைஞர் அணி செயலாளராக மூன்றாண்டுகளை நிறைவு செய்து 4-ஆம் ஆண்டு பயணத்தை தொடங்கும் கழக இளைஞர் அணி செயலாளர், மதிப்பிற்குரிய சேபாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், உயர்திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து கழக சுற்றுச்சூழல் அணியுடன் இணைந்து செயல்படும் வழிகள் குறித்து கலந்தோலசித்த போது.



மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, திமுக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக மரியாதை செலுத்தப்பட்டது. நாட்டின் சுதந்திரத்திற்காக தன்னலமின்றி போராடிய வீரத் தலைவரை நினைவு கூரும் இந்த நிகழ்வில், அவரது தியாகம் மற்றும் வீரத்தைப் பற்றி நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.



சுற்றுச்சூழல் சார்ந்த பணிகளில் சிறப்பாக செயல்பட்ட இளைஞர்களை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்தோம். அவர்கள் திமுக சுற்றுச்சூழல் அணியுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றும்படி ஊக்கமளிக்கப்பட்டது. அவர்கள் முயற்சிகளில் கழகம் என்றும் துணையாக இருக்கும் என்பதை உறுதியாக தெரிவித்தோம்.






காங்கயம் பகுதியைச் சேர்ந்த தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தினர் சந்தித்து, ஒன்றிய அரசு அரிசி மீது விதித்துள்ள GST வரியால் சாமானிய மக்களுக்கு ஏற்படும் பாதிப்பைப் பற்றி விவரித்து, தமிழக நிதித்துறை அமைச்சரைச் சந்திக்கச் சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொண்டனர். இந்த சந்திப்பில், காங்கயம் பகுதியின் பொருளாதாரம் இவ் வரியால் பாதிக்கப்படும் நிலையைப் பற்றி அவர்களுடன் இணைந்து எடுத்துரைத்தோம்.






ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேர்ந்துள்ள முதலாம் ஆண்டு மாணவர்களுடன் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடியதோடு, கல்லூரி வளாகத்தில் 1200 மரக்கன்றுகளை வழங்கி நடவு செய்தோம்.



திருப்பூர் மாவட்ட சுற்றுச்சூழல் அணி மற்றும் காங்கயம் வடக்கு ஒன்றியம் இணைந்து, கீரனூர் பஞ்சாயத்தில் நாட்டுவகை மரக்கன்றுகளை நடும் நிகழ்வை நடத்தினோம். நத்தக்காடையூர் அருகிலுள்ள கீரனூர் கிராமத்தில் உள்ள குளத்தின் கரைகளிலும், மியாவாக்கி முறையிலும் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.



தமிழினத் தலைவர் தலைவர் கலைஞர் அவர்களின் மறைந்த நாளை நினைவுகூரும் வகையில் நடத்தப்பட்ட அமைதி பேரணியில் கலந்துகொண்ட போது, அவரது போராட்டங்கள், பணிகள், தமிழுக்கு அளித்த பெருமைகள் அனைத்தையும் மக்கள் மனங்களில் உறுத்தும் உணர்வுடன் பங்கேற்றேன்.




கோபி அருகே கள்ளிப்பட்டியில்

# கலைஞர் முழு உருவ சிலை அமைக்கும் பணி தீவிரம்

## சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி ஆய்வு



கோபி அருகே உள்ள கள்ளிப்பட்டியில் முதல்வர் வருகையின் போது பொதுமக்களுக்கு 1 லட்சம் மரக்கன்றுகள் வழங்குவது குறித்த ஆலோசனை கூட்டம் மாநில சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி தலைமையில் நடைபெற்றது. அருகில், ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.கே.செல்வன், டி.என்.பாளையம் ஒன்றிய திமுக செயலாளர் சிவபாலன் மற்றும் பலர் உள்ளனர்.

கோபி, ஆக. 18-

கோபி அருகே உள்ள கள்ளிப்பட்டியில் முன்னாள் முதல்வர் கலைஞர் உருவ சிலை மற்றும் கலைஞர் படிப்பகத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார். விழாவில் மாநில சுற்றுச்சூழல் அணி சார்பில் ஒரு லட்சம் மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பான ஆலோசனை கூட்டம் கள்ளிப்பட்டியில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

ஈரோடு மாவட்டம் கோபி அருகே உள்ள கள்ளிப்பட்டியில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் முழு உருவ வெண்கல சிலை அமைக்கும் பணி அனைத்து அரசு துறைகளின் அனுமதி பெறப்பட்டு இரவு பகலாக நடைபெற்று வருகிறது.

இதே போல் டி.என். பாளையம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கள்ளிப்பட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள கிராமப்புற மாணவர்கள் அரசு போட்டி தேர்விற்கு தேவையான புத்தகங்கள் மற்றும் இணையதள வசதியுடன் கூடிய கலைஞர் படிப்பகமும் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இந்த பணிகளை மாநில சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி, ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் குள்ளம்பாளையம் கே.கே.செல்வன், டி.என். பாளையம் ஒன்றிய திமுக செயாலளர் சிவபாலன் உள்ளிட்டோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அதைத்தொடர்ந்து கள்ளிப்பட்டியில் உள்ள தனியார் மண்டபத்தில் முதல்வரை வரவேற்பது குறித்தும், ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் பொதுமக்களுக்கு ஒரு லட்சம் மரக்கன்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பான ஆலோசனை கூட்டம் கள்ளிப்பட்டியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடந்தது. இதில் மாநில சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி கலந்து கொண்டு நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்தார். மேலும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மரக்கன்றுகள் வழங்குவது குறித்தும், ஒரு ஆண்டிற்கு பிறகு சிறப்பாக மரங்களை வளர்த்துள்ள மாணவ, மாணவிகளுக்கு சுற்றுச்சூழல் அணி சார்பில் பரிசு வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் குள்ளம்பாளையம் கே.கே.செல்வன், டி.என்.பாளையம் ஒன்றிய திமுக செயலாளர் சிவபாலன், கைலாஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்
















திமுக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக ஒரு லட்சம் மரக்கன்றுகளை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் கழகத் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். இந்த நிகழ்வில், அவருக்கு கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

சுற்றுச்சூழல்,நீர்மேலாண்மை

## மாணவ,மாணவிகளுக்கு களப்பயிற்சி

காங்கயம்,செப்.5: பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இயற்கை விவசாயம், சுற்றுச்சூழல், நீர் மேலாண்மை, பாரம்பரிய கால்நடைகள், மழைநீர் சேகரிப்பு குறித்த ஒரு நாள் களப்பயிற்சி குட்டப்பாளையம் சிவசேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்று வருகிறது.

இதன் மூலம் அவர்களிடையே தற்சார்பு குறித்த நம்பிக்கை அளிக்கும் விதமாக இப்பயிற்சிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இது குறித்து மாணவர்கள் கூறியதாவது: இப்பயிற்சியில் பள்ளியில் நாங்கள் இதுவரை கண்டிராத பல தகவல்களை அறிந்து கொள்ள முடிந்தது.



குட்டபாளையத்தில் உள்ள காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையத்தில் சுற்றுச்சூழல் மற்றும் நீர்மேலாண்மை குறித்து பள்ளி மாணவர்களுக்கு களப்பயிற்சி அளிக்கப்பட்டது.

மழை குறைவாக பெய்யும் மேற்கு மண்டல பகுதிகளில் மழை நீர் சேகரிப்பு, நமது நாட்டு ரக கால்நடைகள், விவசாயம் குறித்தும் அறிந்து கொள்ள முடிந்தது. விவசாயத்துடன் சேர்ந்து கால்நடைகள் வளப்பது, மனிதனுடன் கால்நடைகள் எவ்வாறு ஒன்றியுள்ளது. பாரம்பரிய நமது உணவு முறைகள், எதனால் மரம் வளர்க்க வேண்டும் என்பது போன்ற பல தகவல்களை நேரிடையாக தெரிந்து கொள்ள முடிந்தது என தெரிவித்தனர்.

## சுற்றுச்சூழல் நீர் மேலாண்மை குறித்து பள்ளி மாணவர்களுக்கு களப் பயிற்சி

காங்கேயம், செப். 5–

நமது பாரம்பரிய விவசாயத்துடன் இணைந்த பாரம்பரிய கால்நடை, சுற்றுச்சூழல், நீர் மேலாண்மை குறித்த களப்பயிற்சி, காங்கேயம் அருகே நடந்தது. இதில் பள்ளி மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

காங்கேயம் காளைகள் ஜல்லிக்கட்டுக்காகவும், வண்டி எருதுகள் குறைந்த தீவனத்தை எடுத்துக்கொண்டு அதிக பாரம் இழுக்கும் தன்மைக்காகவும் புகழ்பெற்றது. ஜல்லிக்கட்டு போராட்டத்தால் காங்கேயம் இன மாடுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது.

விவசாயத்துடன் இணைந்த சுற்றுசூழல், மழை நீர் சேகரிப்பு, இயற்கை விவசாயம் ஆகியனவும் பரவலாக தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதை வளரும் இளம் தலைமுறைக்கு கொண்டு செல்லும் வகையில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இயற்கை விவசாயம், சுற்றுச்சூழல், நீர் மேலாண்மை, பாரம்பரிய கால்நடைகள், மழை நீர் சேகரிப்பு குறித்த ஒரு நாள் களப் பயிற்சி குட்டப்பாளையம் சிவசேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி மையத்தில் நடந்து வருகிறது. இதில், 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.



காங்கேயம் அருகே கால்நடை ஆராய்ச்சி மையத்தில், பாரம்பரிய விவசாயத்துடன் இணைந்த சுற்றுசூழல் குறித்த பயிற்சியில் ஈடுபட்ட பள்ளி மாணவ, மாணவியர்.

பயிற்சியில் பங்கேற்ற மாணவர்கள் கூறியதாவது:

மழை குறைவாக பெய்யும் மேற்கு மண்டல பகுதிகளில் மழை நீர் சேகரிப்பு, நமது நாட்டு ரக கால்நடை, விவசாயம் குறித்தும் அறிந்து கொள்ள முடிந்தது. பாரம்பரிய நமது உணவு முறை, எதனால் மரம் வளர்க்க வேண்டும் என்பது போன்ற பல தகவல்களை நேரிடையாக தெரிந்து கொள்ள முடிந்தது. இவ்வாறு கூறினர்.

2022 SEPTEMBER



தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் மாநில தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் அவர்களுக்கு, திமுக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. இந்த சந்திப்பில், சுற்றுச்சூழல் தொடர்பான நடவடிக்கைகளை சாரண, சாரணியர் இயக்கத்தின் மூலம் பள்ளிகளில் செயல்படுத்தும் நோக்கத்துடன் பரிந்துரை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



தந்தை பெரியார் பிறந்த நாள் செப்டம்பர் 15, கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் 'சமூக நீதி' - நாளாக அறிவித்துள்ளார். அதைக் கொண்டாடும் விதமாக காரணம்பேட்டை பல்லடம் பகுதியில் தந்தை பெரியார் திராவிடர் கழகம் மற்றும் பகுத்தறிவாளர் கழக விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய போது.




பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 144வது பிறந்தநாளான நாளை பெரியார் திடலில் திருச்சி சிறுகனூரில் அமையவிருக்கிற 'பெரியார் உலகத்தின்' அடிக்கல் நாட்டு விழாவை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் அவர்கள் துவக்கி வைக்கிறார். அதில் பங்கேற்றத்தில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்



சமூக நீதி நாளன்று ஈரோடு மாவட்டம் சமூக நீதி கூட்டமைப்பு சார்பாக நடைபெற்ற சனாதன எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்க பங்கேற்ற போது



திருப்பூர் மாவட்டம் காங்கயம் வட்டம் பழைய கோட்டை அருள்மிகு ஆனூர் அம்மன் மகா குடமுழுக்கு விழாவை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் திரு . ஜவகர் அவர்கள் சார்பில் வேம்பு, நாவல், பூவரசு, மாதுளை, நெல்லி, உள்ளிட்ட 3500 மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.






தமிழ்நாடு முதல்வரின் பசுமை தமிழ்நாடு திட்டத்தின் கீழ், 2022 ஆம் ஆண்டில் திமுக சுற்றுச்சூழல் அணி சார்பில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.





கழக சுற்றுச்சூழல் அணியின் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அமைப்பாளர் திரு. கண்ணன் அவர்கள் சுற்றுச்சூழல் அணிக்குக் கிடைத்த மிகப்பெரிய பொக்கிஷம். மிகச்சிறந்த செயல்பாட்டாளர். திரு. கண்ணன் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களும் இணைந்து, ஒட்டன்சத்திரம் தாராபுரம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கள்ளிமந்தையம் என்ற ஊரிலே மிகப்பெரிய நாற்றங்கால் பண்ணையை உருவாக்கி இருக்கிறார்கள்.




October 2022



கழக சுற்றுச்சூழல் அணி கோவையில் உள்ள பந்தய சாலை பகுதிக்கு அருகாமையில் உள்ள காமராஜர் சாலையில் நிர்மலா பெண்கள் கல்லூரிக்கு அருகில் தொல்காப்பியம் சங்க இலக்கியங்களில் உள்ள மரக்கன்றுகளை கண்டறிந்து அந்த மரக்கன்றுகளை நட்டு ஒரு பூங்காவை உருவாக்கி வருகிறது. அதனை மேற்பார்வை இட்டபோது



கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர், கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்குக் கழக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்த பொழுது.





இந்தியாவின் தலைசிறந்த பொருளாதார நிபுணரும், ஹார்வர்ட் பல்கலைக்கழக பட்டதாரியும், முன்னாள் ஒன்றிய நிதி, உள்துறை மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சராகப் பணியாற்றிய மதிப்பிற்குரிய திரு. ப. சிதம்பரம் அவர்கள், திமுக சுற்றுச்சூழல் அணி மாநிலச் செயலாளர் அலுவலகத்துக்கு அக்டோபர் 2022ல் வருகை புரிந்து, இயக்கத்தின் பணிகளை பார்வையிட்டு பாராட்டினார்.




ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் அமைந்துள்ள கொங்கு பொறியியல் கல்லூரியில் Rotaract குழு நடத்திய சூழலியல் கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு இன்றைய காலநிலை மாற்றத்தினால் நாம் எதிர்கொள்ளும் சூழலியல் இடற்பாடுகளைப் பற்றி இளைய தலைமுறையினருக்கு விரிவாக விவரித்ததில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.















தி.மு.க. சுற்றுச்சூழல் அணி சார்பில் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் இணைந்து நடத்திய 'திராவிட ஆட்சியில் சுற்றுச்சூழல்' என்ற ஒரு நாள் கருத்தரங்கம், கழக துணை பொதுச் செயலாளரும் மகளிர் அணி செயலாளருமான, திருமதி கனிமொழி கருணாநிதி MP அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.









LBP வாய்க்காலுக்கு கான்கிரீட் அமைக்கும் திட்டம் விவசாயத்திற்கு தடையாக இருக்கக்கூடும் எனக்கூறி, ஈரோடு, மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் அச்சம் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர். அவர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு விவசாயிகளின் கோரிக்கைகளை கவனமாகக் கேட்டு, அனைத்து தரப்புகளும் சமநிலை பெறும் வகையில் இதற்கு இணையான தீர்வு எட்டப்படும் என கூட்டத்தில் உறுதி அளித்தேன்.




மாலை முரசு செய்திகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் முரசாங்கம் நிகழ்வில் நேரலையில் 2022 November



இட ஒதுக்கீடே சமூக நீதிக்கான அடித்தளமாக இருப்பதை வலியுறுத்தும் வகையில், இன்று அலுவலகத்திற்கு வந்த அருந்ததியினர் சமூகத்தை சேர்ந்த உடன் பிறப்புகளுடன் சந்தித்து உரையாடினோம். இந்த சந்திப்பின் போது, 2009 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களின் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு அப்போதைய துணை முதல்வரும் தற்போதைய தமிழ்நாடு முதல்வருமான மாண்புமிகு தளபதி அவர்கள் சட்டமன்றத்தில் கொண்டு வந்த 3% உள் ஒதுக்கீடு பற்றியும், அதன் மூலம் கடந்த 13 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான அருந்ததியர் மாணவர்கள் மருத்துவம், நிர்வாகம் உள்ளிட்ட உயர் நிலைப் பதவிகளுக்கு வந்துள்ள விபரங்களை காணொளி மூலம் விளக்கினோம்.



தஞ்சை தெற்கு மாவட்ட திமுக சார்பாக நடைபெற்ற இந்தி எதிர்ப்பு கொள்கை விளக்க பொதுக்கூட்டத்தில் எழுச்சி உரையாற்றிய போது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்,
**கழகத் தலைவர்** அவர்கள் தலைமையில்
தத்துவ மேதை **டி.கே.சீனிவாசன்** அவர்களின்

**நூற்றாண்டு நிறைவு விழா -**
**நூல்கள் வெளியீட்டு விழா**

நாள்: 24.11.2022 வியாழக்கிழமை மாலை 5.00 மணி
இடம்: "கலைஞர் அரங்கம்", அண்ணா அறிவாலயம், சென்னை-18

விழாத் தலைமையேற்று - நூல்களை வெளியிடுபவர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள்

நூல்களைப் பெறுபவர்
திராவிடர் கழகத் தலைவர்
மானமிகு ஆசிரியர் **கி.வீரமணி**

வாழ்த்துரை
கழகப் பொதுச்செயலாளர்
மாண்புமிகு **துரைமுருகன்**
கழகப் பொருளாளர்
திரு. **டி.ஆர்.பாலு,** எம்.பி.
திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச்செயலாளர்
பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்**
கவிஞர் **ஈரோடு தமிழன்பன்**

வரவேற்புரை:
**மு.சிபிகுமரன்**
ஆர்வம் வெளியீட்டகம்

நன்றியுரை:
**டி.கே.எஸ். இளங்கோவன்**
தி.மு.க. செய்தித் தொடர்பு செயலாளர்

கார்த்திகைத் திங்கள் 8-ம் நாள் 24 -11-2022 அன்று மாலை 5 .00 மணியளவில் திராவிடச் சுடர் விளக்கு 'தத்துவ மேதை' டி. கே. சீனிவாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நூல் வெளியிட்டு விழா பங்கேற்ற போது.







திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பொங்கலூர் ஒன்றியம், வேளராசி. கள்ளிப்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி .சாந்தினி சம்பத்குமார் அவர்களின் வேண்டுகோளிற்கினங்க கள்ளிப்பாளையம் ஊராட்சி முழுவதும் நடவு செய்வதற்கு மண்ணுக்கேற்ற மரக்கன்றுகளை திமுக சுற்றுச்சூழல் அணி வழங்கியுள்ளது.








இந்தியாவில் முதன்முறையாக கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உருவாக்கப்பட்டது கழகச் சுற்றுச்சூழல் அணி. கழகச் சுற்றுச்சூழல் அணி இரண்டாவது முறையாக செயலாளராக பொறுப்பேற்ற பின்பு கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களிடம் கழகச் சுற்றுச்சூழல் அணியின் தலைவர் திருமதி . பூங்கோதை ஆலடி அருணா மற்றும் மாநில துணைச்செயலாளர்களுடன் வாழ்த்துக்கள் பெற்றோம்.

இந்திய ஒன்றியத்தில் தலைசிறந்த முதல்வரான நமது மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை இன்று சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றோம் தமிழ்நாட்டில் அனைத்து துறைகளிலும் முதன்மை மாநிலமாக மாற்ற பாடுபடும் முதல்வரின் கரங்களை வலுப்படுத்த துணை நிற்போம்.











திருப்பூர் நகரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நஞ்சராயன் குளத்தில் காணப்படும் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக, நஞ்சராயன் குளம் பாதுகாப்பு இயக்கம் சார்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் வழக்கறிஞர் திரு. ஈசன் முருகசாமி (நிறுவனர், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்), திரு. சண்முகசுந்தரம் (தலைவர், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்), திரு. ஈஸ்வரன், திரு. பி. கிருஷ்ணசாமி (KAK), திரு. வி.பி. ரவிச்சந்திரன், திரு. நாகேந்திரன் ஆகியோர்களிடம் மனுவை பெற்றுக்கொண்டு, அதற்கான சட்ட நடவடிக்கைகள் மற்றும் பயன்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம் என உறுதியளித்தேன்.







ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சார்ந்த கீழ் பவானி பாசன பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக, இயற்கை வேளாண் முன்னோடி ஐயா திரு. நம்மாழ்வார் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னிமலையில் அமைந்துள்ள கௌரி திருமண மண்டபத்தில் நினைவேந்தல் மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு, கழகத்தின் சுற்றுச்சூழல் தொலைநோக்கு பார்வையை விளக்கியும், இயற்கை வளங்கள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் உரையாற்றினேன்.



வெள்ள கோவில் நகரத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிலாளர் நலக் கட்டிடம் கட்டுவது தொடர்பாக கழகச் சுற்றுச்சூழல் மாநிலச் செயலாளர் அலுவலகத்திற்கு திமுக தோழர்கள் வருகை தந்திருந்தார்கள் அவர்களுடன் தி.மு.கழகம் சார்ந்த தொழிலாளர் நலன் பேணும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டேன்.



2024 JANUARY























கழகச் சுற்றுச்சூழல் அணியின் மரக்கன்றுகள் நடும் விழா திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுடைய தலைமையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது வளர்ந்த இரண்டு வருட வயதுள்ள சுமார் 2000 மரக்கன்றுகளை நடுவதற்கான நிகழ்வினை தொடங்கி வைத்தோம்.



சென்னை கொங்கு நாடு அறக்கட்டளை நடத்திய 34 ஆம் ஆண்டு விழா மற்றும் சான்றோர்களுக்கு விருது வழங்கும் விழா....

திருப்பூர், திருமுருகன் பூண்டி நடந்த சென்னை கொங்குநாடு அறக்கட்டளையின் 34 ஆம் ஆண்டு விழா ஞாயிறு அன்று நடைபெற்றது. இதில் அறக்கட்டளை விழா மலர் வெளியீடு...








06-02-2024 அன்று திருப்பூர் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக்கல்லூரியின் ஐம்பெரும் விழா மற்றும் முத்தமிழ் விழாவிற்கு தலைமையேற்றேன்.



வனத்துக்குள் திருப்பூர், நிழல்கள் அறக்கட்டளை மற்றும் துளிர்கள் ஆகிய மூன்று அமைப்புகளுடன் இணைந்து வெள்ளகோவில் சிறுங்கிணத்துபாளையம் செல்லும் சாலையில் மரம் நடுவிழாவில் கலந்து கொண்ட பொழுது



FEB 2024 கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில், காமராஜ் சாலை நெருங்கிய பகுதியில் கடந்த ஆண்டு சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட மரக்கன்றுகளை மாநில துணைச் செயலாளர் திரு. மணி சுந்தர் மற்றும் திரு. ஜவகர் வெள்ளியங்கிரி அவர்களின் முன்னெடுப்பில் நட்டோம். இப்போது வனம் போல் வளர்ந்துள்ள அந்த மரங்களை பார்வையிட்டோம். மாவட்ட பொறுப்பாளர் திருமதி சத்யா, 83 வார்டு கவுன்சிலர் திருமதி சுமா விஜயகுமார் மற்றும் கழகச் செயலாளர் திரு. விஜயகுமார் மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டனர்.



கோவையில் நடைபெற்ற 'வடக்கு தெற்கை வஞ்சிக்கின்றதா?' என்ற தலைப்பிலான புதியதலைமுறை தொலைக்காட்சியின் வட்டமேசை விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன்.



பொங்கலூர் ஒன்றியச் செயலாளர் திரு. அசோக் மற்றும் பொங்கலூர் ஒன்றியத் துணைத் தலைவர் அவர்களை இன்று கழக சுற்றுச்சூழல் அணியின் அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தபோது, பாராளுமன்றத் தேர்தல் குறித்தும், பல்வேறு முக்கியமான விடயங்களைப் பற்றியும் அவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டேன்.





கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் தொகுதியில், விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் நீரை தனியார் நிறுவனத்திற்கு வழங்கும் தண்ணீர் ஒப்பந்தத்திற்கு கடந்த அதிமுக ஆட்சியில் ஒப்புதல் வழங்கப்பட்டது. தேர்தல் காலத்தில் அதனை தடுத்து நிறுத்துவேன் என உறுதி அளித்தேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக முயற்சி எடுத்தும், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் செய்தோம். தற்போது வெற்றி பெற்ற நிலையில், அந்த பகுதி விவசாயிகள் நன்றியுடன் மாநிலச் செயலாளர் அலுவலகத்தை வந்துசென்றனர். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற கொள்கையோடு, இந்த வெற்றி முற்றிலும் மக்களின் ஒற்றுமையின் பலனாகும்.





MARCH 2024

கழகச் சுற்றுச்சூழல் அணியின் மாநிலத் தலைமை அலுவலகத்திற்கு, திருப்பூர் ஆடல் வல்லான் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் மற்றும் ஆதவன் கிளாத்திங் நிறுவன உரிமையாளர் அன்பு நண்பர் திரு. கிருஷ்ணகுமார், அருணம் இழையோவியம் (அருணம் எம்பிராய்டரி) திரு. வேலுமணி, மற்றும் வெஸ்ட் லேண்ட் திரு. ஜெகதீஷ் ஆகியோர் வந்திருந்தனர்.

இந்நிகழ்வில், பள்ளிகளில் கல்விப் பணி, ஒரு பள்ளி மற்றும் தொழிற்சாலைகளில் எவ்வாறு கழிவுகளை அப்புறப்படுத்துவது, மற்றும் மரக்கன்றுகள் நடுவது குறித்து விரிவாக கலந்துரையாடினோம்.



கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு கழகச் சுற்றுச்சூழல் அணியின் மாநிலத் துணைச் செயலாளர் (கோவை நீலகிரி ஈரோடு மாவட்டம் பொறுப்பாளர்) திரு.நா.மணி சுந்தர் அவர்களின் முன்னெடுப்பில் கழகச் சுற்றுச்சூழல் அணியின் பல்வேறு தோழர்கள் மாநகர மேயர் ஆகியோர் இணைந்து இந் நிகழ்வைத் தொடங்கி வைத்தோம்.

நேற்று கோவையில் அந்த மரக்கன்றுகள் நட்ட இடம் இப்பொழுது வனமாக உருவாகி இருக்கக்கூடிய இடத்தைச் சென்றுபார்வையிட்டோம்மிக அற்புதமாகப் பறவைகளுடன், அடுக்குமாடி கட்டிடங்களுக்கு நடுவிலே ஒரு அற்புதமான வனம் உருவாகி நிற்பதை நாங்கள் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தோம்.




மக்களவைத் தேர்தல் 2024 பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழகமும் கூட்டணி கட்சிகளும் சேர்ந்த போட்டியாளர்களுக்காக, இணையதளம் வாயிலாகவும் நேரடியாகவும் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.





திமுக சுற்றுசூழல் அணியில் புதிதாக நியமனம் செய்யப்பட்டிருக்கின்ற கோவை வடக்கு மாவட்ட பொறுப்பாளர்கள் இன்று அணியின் மாநிலத் துணைச் செயலாளர் திரு.நா.மணிசுந்தர் அவர்களுடன், அணியின் மாவட்ட தலைவர் திரு. கரும்புக்கடை சாதிக், மாவட்டப் பொறுப்பாளர் திரு. கார்த்திக் ஆகியோருடன் அன்மையில் சுற்றுச்சூழல் அணியின் மாநிலச் செயலாளர் அலுவலகத்துக்கு வந்திருந்தனர், அவர்களுடன் கலந்துரையாடல் மிகவும் சிறப்பாக அமைந்தது.





THE HINDU

City

Monday, April 22, 2024
COIMBATORE

# District administration refuses permission to cut trees in Pollachi for road project

The Highways Department had identified 27 tamarind trees at Thathur junction for a road-widening project; a few days before the election dates were announced, District Collector Kranthi Kumar Pati had asked the department to look at alternative solutions

M. Soundariya Preetha and Avantika Krishna
COIMBATORE

Tamarind trees that are more than 50-years-old form a green canopy along the 16-km stretch from Ambarampalayam to Sethumadai in Pollachi in Coimbatore district.

The district administration on Sunday clarified that it has refused permission to cut 27 of these trees at Thathur junction for a road improvement project.

According to official sources, the Highways Department has taken up works to widen at ₹2.2 crore the two-lane road for 200 metres on either side of Thathur junction as it is identified as an accident-prone zone. The works were scheduled for completion in June and 27 tamarind trees at the junction were identified for removal to enable widening and improvement of the junction.

However, a few days before the election dates were announced, District Collector Kranthi Kumar Pati had asked the department to look at alternative solutions and said that the trees cannot be cut. Fearing removal of the trees, nearly 20 members of a local federation gathered at Mukkonam, Anaimalai, to stage a protest on April 20 against removal of the trees.

The tree-lined Ambarampalayam - Sethumadai road. FILE PHOTO

"These trees are crucial for the ecosystem, considering the nearby forests and wildlife. They also remain green throughout the year, offering relief during the scorching summer as they form a canopy of sorts on the stretch between Thathur and Sundarapuri," said Paramasivam, a spokesperson for the group.

T.K. Dhanasekar, who is a native of Thathur, told *The Hindu* on Sunday that his uncle Thathur A. Chinnasamy Gounder who was chairman of Anamalai panchayat union, planted the trees and also maintained them.

"Further, five panchayats get revenue from the tamarind from these trees now. The trees were planted almost 10 feet away from the edge of the road," he added.

Karthikeya Sivasenapathy, secretary of DMK's environment wing, said in a press release on Sunday, "The trees adorning the Annamalai Top Slip Road will remain untouched. This historic roadway is not merely a thoroughfare, it is a living testament to Tamil Nadu's environmental heritage... The Annamalai Top Slip Road stands as a symbol of our environmental legacy, and we are duty-bound to protect it."

Pravin Shanmughanandam of the Pollachi Papyrus, in a petition to the Coimbatore district administration and the State government, said that to conserve the scenic and significant tree-lined roads in and around Pollachi and to safeguard the green ambience created as a result of more than 80 years of care, four roads (Pollachi Aliyar Road, Ambarampalayam - Anaimalai Road, Vettaikaranpudur - Sethumadai Road, Anaimalai Sungam Road ) should be identified and marked as Heritage roads. A green buffer of 10 metres on both sides of the Heritage Road can be enforced to prohibit littering and removal of trees or plants for road expansion or other development works.

Pollachi Sub-Collector Catherine Saranya said in a press release on Sunday that cutting the trees would impact the scenic environment of the area.

Highway Department officials said they will look at an alternative plan within a week.



ஈரோடு பாராளுமன்ற தொகுதியின் கழக வெற்றி வேட்பாளர் லு.சி.பிரகாஷ் அவர்களுக்கு பள்ளிபாளையம் பகுதியில் பரப்புரை மேற்கொண்டோம்.




2024 பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு, கோயம்புத்தூரில் ஊடகவியலாளர்களை சந்திக்க வாய்ப்பு கிடைத்தது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், பெண்களுக்கு இலவச பேருந்து, மாதம் ரூ.1000 உதவித்தொகை, வீடு தேடி சுகாதார சேவை, வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் போன்ற பல நலத்திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டை முன்னேற்ற மாநிலமாக மாற்ற அரசு செயல்பட்டு வருகிறது. மேலும், சமூக நீதி, கல்வித் தரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற முக்கியமான துறைகளிலும் தொடர்ந்து முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன என்பதையும் எடுத்து உரைத்தேன்.

# 1.5 லட்சம் மர நாற்றுகள் 'ரெடி' இலவசமாக வினியோகம்

**மேட்டுப்பாளையம், ஜூன் 29–**

பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டத்தில், ஒரு லட்சத்து 50 ஆயிரம் மர நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. விவசாயிகள், பொதுமக்கள் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என, வனத்துறை தெரிவித்துள்ளது.

காரமடை வனச்சரகர் ரஞ்சித் கூறியதாவது:

கோவை மாவட்டம் காரமடை, மேட்டுப்பாளையம் மற்றும் அன்னூர் பகுதிகளில் வனத்துறையின் நாற்றுப்பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளில், 'பசுமை தமிழ்நாடு இயக்கம்' திட்டத்தில், தேக்கு, மலைவேம்பு, சவுக்கு, மகாகனி, புங்கன், பாதாம், வேம்பு உள்ளிட்ட வகையிலான, ஒரு லட்சத்து 50 ஆயிரம் மர நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகள், பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள் மற்றும் தரிசு நிலதாரர்களுக்கு இலவசமாக நாற்றுகள் வழங்கப்படும்.

வாங்க விரும்புவோர், 9843611370, 9626469997 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு, ஆதார் நகல், புகைப்படம் மற்றும் சிட்டா ஆகிய ஆவணங்கள் சமர்ப்பித்து நாற்றுகள் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.




மரியாதைக்குரிய Classic Polo சிவராம் அவர்களின் மகளின் இணையேற்பு விழாவில், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் திரு. பாமயன், திரு. கோவை சதாசிவம், திரு. சுந்தர்ராஜன் (பூவுலகின் நண்பர்கள்), திரு. ஓசை காளிதாசன், திரு. செந்தூர் பாரி மற்றும் திரு. குமார் துரைசாமி ஆகியோரை அழைத்து சிறப்பான சூழலியல் கருத்தரங்கு நடைபெற்றது. பிளாஸ்டிக் பொருட்கள் இல்லாமல், source segregation முறையில் கழிவுகள் அகற்றப்பட்டு விழா நடத்தப்பட்டது.

இந்த அனுபவத்தை ஒரு மாதிரித் திட்டமாகக் கொண்டு, மாநிலமுழுவதும் நடைபெறும் திருமணங்கள் மற்றும் பெருநிகழ்வுகளில் பசுமை நடைமுறைகளை அமல்படுத்தும் திட்டத்தை வகுத்துள்ளோம். இது போல ஒவ்வொருவரும் தங்கள் நிகழ்வுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஒத்துழைத்தால், பசுமைத் தமிழ்நாட்டை உருவாக்க முடியும்.



மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் 219ஆவது நினைவு நாளையொட்டி, திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் ஓடாநிலை கிராமத்தில் உள்ள மேலப்பாளையத்தில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில், கழகச் சுற்றுச்சூழல் அணியின் சார்பாக மரியாதை செலுத்தினோம். நிகழ்வில் முன்னாள் ஒன்றியச் செயலாளர் திரு. சிதம்பரம், மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஜவகர், பஞ்சாயத்து தலைவர் திரு. ஈசுவரமூர்த்தி, திரு. வேலுசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூரில் கடந்த 11 ஆண்டுகளாக ’இனி ஒரு விதி செய்வோம்’ என்ற அறக்கட்டளையை இயக்கி வரும் திருமதி கவிதா ஜனார்த்தன் அவர்களின் நிகழ்வில் கலந்துகொண்டேன். திருப்பூர் மாநகராட்சி மேயர் திரு. தினேஷ் குமார் மற்றும் மாநகராட்சி ஆணையர் திரு. பவன் குமார், இ.ஆ.ப. ஆகியோருடன் கலந்து கொண்டது மகிழ்ச்சியாக இருந்தது. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக நிகழ்வுகளை நடத்தி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல செயலில் ஈடுபட்டு வரும் திருமதி கவிதா ஜனார்த்தனின் உயர்ந்த நெறியோடான சேவையை பாராட்டி, நிகழ்வில் உரையாற்றினேன்.









கொங்கு மண்டலத்திற்குட்பட்ட கழகச் சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மண்டலத்தின் சுற்றுச்சூழல் தொடர்பான செயல்பாடுகள், எதிர்கால திட்டங்கள் மற்றும் இயக்க ஒழுங்கமைப்புகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.



கழகச் சுற்றுச்சூழல் அணி தமிழ்நாடு முழுவதும் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணிகளை திட்டமிட்டு செயல்படுத்தும் வகையில், அனைத்து மண்டல உறுப்பினர்களிடமும் கேட்டுக் கொண்டதன் ஒரு பகுதியாக, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் அருமை சகோதரர் மாணிக்கவாசகம் அவர்கள், அணி நிர்வாகிகளின் ஒருங்கிணைப்புடன் மரக்கன்று வழங்குதல் மற்றும் மீண்டும் மஞ்சப்பை வழங்கும் நிகழ்வை சிறப்பாக மேற்கொள்விக்கப்பட்டது. இந்த நிகழ்வு, கழகத்தின் பசுமை நோக்கையும், சுற்றுச்சூழல் குறித்த பொது விழிப்புணர்வையும் வலியுறுத்தும் வகையில் அமைந்தது.

சிந்துவெளி நாகரிகம் அல்லது ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படும் இந்த தொன்மையான நாகரிகத்தை சர் ஜான் மார்ஷல் என்ற ஆங்கிலேயர் கண்டுபிடித்துப் பின்பு, இன்று நூறாண்டுகள் ஆகின்றன. அதன் நூற்றாண்டை நாம் கொண்டாடி வருகிறோம். நமது முன்னோர்களை நாம் தமிழ்நாட்டில் மரியாதையுடன் கொண்டாடும் பாரம்பரியம்போல், உலக வரலாற்றில் நம் தொன்மை நாகரிகத்தைப் பறைசாற்றும் சிந்துவெளி நாகரிகத்தை நாம் கொண்டாடுவது, ஒரு வரலாற்றுப் பெருமையாக அமைகிறது.
இதனைப்பற்றிய முக்கியமான ஆவணமாக, திரு ஆர். பாலகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். அவர்களின் 35 ஆண்டுகால உழைப்பின் பலனாக, "Journey of the Civilization' என்ற ஆங்கிலப் புத்தகம் 2019-ல் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 2021-ல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அந்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பையும் வெளியிட்டார்.








மேற்கு மண்டல தி.மு.க சுற்றுச்சூழல் அணி ஏற்பாட்டில் சுற்றுச்சூழல் பயிலரங்கம் மற்றும் சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கும் விழா கோவையில் வெற்றிகரமாக நடைபெற்றது.





கோவை, நீலகிரி, ஈரோடு மண்டல மாநிலத் துணைச் செயலாளர் திரு நா. மணிசுந்தர் மற்றும் திருப்பூர், நாமக்கல், கரூர் மண்டல மாநிலத் துணைச் செயலாளர் திரு. நாராயண மூர்த்தி ஆகியோருடன் மாநிலச் செயலாளர் அலுவலகத்தில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் துணைப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு, அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஆராய்ந்து, பல்வேறு நிகழ்வுகளைக் குறித்து விவாதித்தனர். காலநிலை மாற்றத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கழகச் சுற்றுச்சூழல் அணி தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகளையும் முன்னெடுப்புகளையும் எடுத்து வருகிறது.





இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com





கோவை அவினாசி சாலையில் உள்ள ஜென்னிஸ் ரெசிடென்சியில் உள்ள டையமண்ட் ஹாலில் நடைபெற்ற, மேற்கு மண்டல திமுக சுற்றுச்சூழல் அணி "சுற்றுச்சூழல் விருதுகள் 2024" வழங்கும் விழா, அயலக தமிழர் நல வாரியதலைவர், திமுக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டு வாழ்த்தி, சிறப்புரையாற்றினார். திமுக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர்கள் ந.மணிசுந்தர், மா.நாராயணமூர்த்தி வரவேற்புரையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், தமிழ்நாடு வன உயிரின வாரிய உறுப்பினர் ஓசை காளிதாஸ், திமுக சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர்கள் மாநகர் மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஸ்ரீ சத்யா கோவை தங்கம், ராமச்சந்திரன், கார்த்திக் குமார், விஜயகுமார், பி.ஏ.சேகர், தண்டபாணி, கேபிள் விஜய்,இளங்கவி, கே.கே.செல்வம், இமயம் சிவகுமார், விநாயகமூர்த்தி, ரவிச்சந்திரன், நல்லுசாமி, திமுக சுற்றுச்சூழல் அணி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட அனைத்து மாவட்ட துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





### தி.மு.க.மேற்கு மண்டல சுற்றுச்சூழல் அணி சார்பில்

# சிறந்த சூழலியல் ஆர்வலர்களுக்கு விருது வழங்கும் விழா

## கோவையில் நாளை நடக்கிறது

திருப்பூர்,செப்.25-

தி.மு.க. மேற்கு மண்டல சுற்றுச்சூழல் அணி சார்பில் நாளை (வியாழக்கிழமை) சிறந்த சூழலியல் ஆர்வலர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா கோவையில் நடக்கிறது.

### விருதுகள் வழங்கும் விழா

தி.மு.க. மேற்கு மண்டல சுற்றுச்சூழல் அணி சார்பில் கோவை, ஈரோடு, நீலகிரி திருப்பூர், நாமக்கல், கரூர் மாவட்டங்களில் சிறப்பாக செயல்படும் சூழலியல் ஆர்வலர்களை சிறப்பித்து விருதுகள்-2024 வழங்கும் விழா நாளை (வியாழக்கிழமை) மாலை 4.30 மணிக்கு கோவை-அவினாசி ரோட்டில் உள்ள ஜென்னிஸ் ரெசிடென்சி டைமண்ட் ஹாலில் நடக்கிறது.

விழாவிற்கு தமிழக வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமை தாங்குகிறார். அயலக தமிழர் நல வாரிய தலைவரும், தி.மு.க. சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளருமான கார்த்திகேயசிவசேனாபதி முன்னிலை வகிக்கிறார். கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், தமிழ்நாடு வன உயிரின வாரிய உறுப்பினர் ஓசை காளிதாசன் ஆகியோர் கருத்துரையாற்றுகிறார்கள்.

### எம்.எல்.ஏ.-மேயர்

தி.மு.க.சுற்றுச்சூழல் அணி மாநில துணைச்செயலாளர் மா.நாராயணமூர்த்தி வரவேற்றுப் பேசுகிறார். தி.மு.க.சுற்றுச்சூழல் மாநில துணைச்செயலாளர் ந.மணிசுந்தர் விழா அறிமுக உரையாற்றுகிறார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திருப்பூர் செல்வராஜ் எம்.எல்.ஏ., திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் மற்றும் கோவை தி.மு.க.மாவட்ட செயலாளர்கள்,கோவை மாநகராட்சி மேயர், துணை மேயர் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

விழா ஒருங்கிணைப்பாளர்களாக திருப்பூர் வடக்கு பி.ஏ.சேகர், திருப்பூர் வடக்கு மாநகர் தி.க.தண்டபாணி, திருப்பூர் தெற்கு மாநகர பொறுப்பாளர் கேபிள் விஜய் நீலகிரி, கோவை, ஈரோடு, நாமக்கல், கரூர் மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர்கள் உள்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.

### பயிலரங்கம்

முன்னதாக நாளை காலை 9 மணிக்கு ஜென்னிஸ் ரெசிடென்சி டைமண்ட் ஹாலில் மேற்கு மண்டல தி.மு.க. சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகளுக்கான பயிலரங்கம் நடக்கிறது. இதற்கு தி.மு.க.சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் மா.நாராயணமூர்த்தி வரவேற்புரையாற்றுகிறார். மாநில துணை செயலாளர் ந.மணிசுந்தர் அறிமுக உரையாற்றுகிறார். பயிலரங்கை தி.மு.க. சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேயசிவசேனாபதி தொடங்கிவைத்து சிறப்புரையாற்றுகிறார்.

## தனியார் மருத்துவமனை







**இந்து தமிழ் திசை**

**சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையத்தில்**

## 'நொய்யல் வனம்' காடு வளர்ப்பு திட்டம் தொடக்கம்

**மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பங்கேற்பு**

● காங்கயம்

சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் மற்றும் வனத்துக்குள் திருப்பூர் இணைந்து, காங்கயம் வட்டம் குட்டபாளையத்திலுள்ள சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையத்தில் 'நொய்யல் வனம்' எனும் தனியார் காடுகள் வளர்ப்பு திட்டத்தை தொடங்கியுள்ளது.

நொய்யல் நதிக்கரை பகுதிகளில் தனியார் பங்களிப்பில், தனியார் நிலத்தில் பெரும் பரப்பளவில் மரக்கன்றுகள் நட்டு வளர்த்து, சுற்றுச்சூழலை காக்கும் திட்டம் தான் நொய்யல் வனம். நிறுவனங்களின் சமூக பங்களிப்பு திட்டத்தின் உதவியுடன், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய நிர்வாக அறங்காவலரின் சொந்த நிலத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

சிறப்பு விருந்தினர்களாக திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் ஆகியோர் பங்கேற்றனர். தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் மற்றும் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையத்தின் நிர்வாக அறங்காவலர் கார்த்திகேய சிவசேனாபதி வரவேற்றார். திருப்பூர் கிளாசிக் போலோ நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும், வெற்றி அமைப்பின் நிர்வாக அறங்காவலருமான டி.ஆர்.சிவராம், திரைப்பட இயக்குநர் ஹமிதா சமீம் உட்பட பலர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் பேசும்போது, "தமிழ்நாடு அரசு சுற்றுப்புற சூழல் மேம்பாட்டுக்காக முன்னெடுக்கும் பல்வேறு முயற்சிகளில், 'நொய்யல் வனம்' போன்ற திட்டங்கள் முக்கியப் பங்கு வகிக்கும். 'எல்லோருக்கும் எல்லாம்' எனும் ஆட்சி முறையில், சூழல் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்" என்றார்.

இதைத்தொடர்ந்து, நொய்யல் வன நிகழ்வை ஒட்டி, முதல் கட்டமாக ஒரு மாதத்தில் 6 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. இதில் 20 வகையான மரக்கன்றுகள் அடங்கும். பள்ளி குழந்தைகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



காங்கயம் அருகே குட்டப்பாளையத்தில் 'நொய்யல் வனம்' வளர்ப்பு திட்டத்தை தொடங்கிவைத்த மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் உள்ளிட்டோர்.

---

தொண்டரணி அமைப்பாளர் அருள்மொழி நன்றியுரையாற்றுகிறார்

தலைமை: தா.கிறிஸ்துராஜ் முன்னிலை: சிவசேனாபதி சாமிநாதன் வரவேற்புரை கார்த்திகேய சிவசேனாபதி

## நொய்யல் வனம் திட்ட துவக்க விழா!

**ஜெ.ஜெயரஞ்சன் - ந.தினேஷ் குமார் பங்கேற்பு!**

திருப்பூர், அக்.2-

திருப்பூர் மாவட்டம், காங்கயம் தாலுகா, குட்டப் பாளையம் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் மற்றும் வனத்துக்குள் திருப்பூர் இணைந்து நடத்தும் நொய்யல் வனம் நொய்யல் நதிக்கரை பகுதிகளில், தனியார் பங்களிப்பில், தனியார் நிலத்தில் பெரும் பரப்பளவில் மரக்கன்றுகள் நட்டு வளர்த்து சுற்றுச்சூழல் காக்கும் நொய்யல் வனம் திட்ட துவக்க விழா இன்று (02.10.2024-புதன்கிழமை) காலை 08 மணியலவில் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமை யில் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய தலைவர், குட்டப்பாளை யம் சாமிநாதன் கல்வி மற்றும் அறச்செயல் அறக்கட்டளை தலைவர், குட்டப்பாளையம் ஸ்ரீ அரவிந்தர் சொசைட்டி செயலாளர் சிவசேனாபதி சாமிநாதன் முன்னிலையில் அயலகத்தமிழர் நல வாரிய தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய நிர்வாக அறங்காவலர் கார்த்திகேய சிவசேனாபதி வரவேற்புரையில் வெகு சிறப்பாக நடைபெற வுள்ளது.

இவ்விழாவில் தமிழ்நாடு அரசு மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், திருப்பூர் மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர் ந. தினேஷ்குமார் ஆகியோர் மரக்கன்று களை நட்டு வைக்கின்றனர். இதில் "வெற்றி" நிர்வாக அறங்காவலர் டி.ஆர்.சிவராம்,

சென்னை, ரோஜா முத்தையா ஆய்வு நூலக இயக்குனர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய அறங்கா வலர் சுந்தர் கணேசன், திரைப்பட இயக்குனர் செல்வி. ஹமிதா சமீம், தூத்துக்குடி தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பொது மேலாளர் பி.ஆர்.அசோக்குமார் ஆகியோர் சிறப்பு வந்து நல்லா கலந்து கொள்கின்றனர்.

வெஸ்டர்ன் மெடிக்கல் மார்க்கெட்டிங் கே.கே.. செல்வம், அங்குலட்சுமி ஸ்பின்னிங் மில்ஸ் சதாசிவம், டி.எம்.ஆர். கிரீன் எனர்ஜி லிமிடெட் ரஞ்சித், வி.கே.எஸ்.எம். கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் பார்த்திபன், கவின் மோகன் ஆகியோர் நொய்யல் வனம் திட்டத் திற்கு, தமது சமூக பங்களிப்பு செயல்கள் (CSR) மூலம் பங்காற்றி வுள்ளார்கள்.

இறுதியில் குட்டப்பாளையம் சாமி நாதன் கல்வி மற்றும் அறச்செயல் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர், ஆனூர் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் அரவிந்த் நல்லதம்பி நன்றியுரை யாற்றுகிறார்.






### நிகழ்ச்சி நிரல்

தமிழ் தாய் வாழ்த்து

முன்னிலை :
**திரு. சிவசேனாபதி சாமிநாதன்,**
தலைவர் -சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம்,
தலைவர், குட்டப்பாளையம் சாமிநாதன் கல்வி அறக்கட்டளை,
செயலாளர் - ஸ்ரீ அரவிந்தர் சொசைட்டி, குட்டப்பாளையம்.

வரவேற்புரை :
**திரு. கார்த்திகேய சிவசேனாபதி,**
தலைவர், அயலகத்தமிழர் நல வாரியம், தமிழ்நாடு அரசு
செயலாளர், சுற்றுச்சூழல் அணி, தி.மு.க.
நிர்வாக அறங்காவலர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம்.

வாழ்த்துரை :
**திரு. கிறிஸ்துராஜ், I.A.S**
மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர்

முதன்மை விருந்தினர் உரை :
**திரு.ஜெ.ஜெயரஞ்சன்,**
துணைத்தலைவர், மாநில திட்டக்குழு, தமிழ்நாடு அரசு

சிறப்புரை :
**திரு. நா. தினேஷ் குமார்,**
மாண்புமிகு மேயர்
திருப்பூர் மாநகராட்சி

**திரு. T R சிவராம்,**
நிர்வாக அறங்காவலர், "வெற்றி"

**திரு. சுந்தர் கணேசன்,**
இயக்குனர், ரோஜா முத்தையா ஆய்வு நூலகம், சென்னை
அறங்காவலர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம்.

**செல்வி. ஹமீதா ஷமீம்,**
திரைப்பட இயக்குனர்

**திரு. P R அசோக்குமார்,**
பொது மேலாளர்,
தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி,
தூத்துக்குடி

நன்றி நவிலல் :
**திரு. அரவிந் நல்லதம்பி,**
நிர்வாக அறங்காவலர், குட்டப்பாளையம் சாமிநாதன் கல்வி அறக்கட்டளை,
தாளாளர் - ஆனூர் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி.

**நொய்யல் வனம்** - நொய்யல் நதிக்கரை பகுதிகளில், தனியார் பங்களிப்பில், தனியார் நிலத்தில் பெரும் பரப்பளவில் மரக்கன்றுகள் நட்டு வளர்த்து சுற்றுச்சூழல் காக்கும் திட்டம்.

நொய்யல் வனம் திட்டதிற்கு , தமது சமூக பங்களிப்பு செயல்கள் (CSR) மூலம் பங்காற்றியவர்கள்

TMB
Seshasayee Paper and Boards Limited
திரு. K K செல்வம், Western Medical
திரு. சதாசிவம், Kaveri Irrigations
M/s. அங்குலக்ஷ்மி ஸ்பின்னிங் மில்ஸ்.
திரு. ரஞ்சித், DMR Green Energy Limited.
திரு. பார்த்திபன், VKSM Green Energy Pvt Ltd.
திரு. கவின் மோகன்



வனப்பரப்பை 33% ஆக உயர்த்தி, காலநிலை மாற்றத்தைத் தணித்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உயரிய நோக்கத்தை நடைமுறையில் கொண்டு வர, திருப்பூர் மாவட்டத்தில் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் மற்றும் வனத்துக்குள் திருப்பூர் அமைப்பு இணைந்து, அக்டோபர் 2ஆம் தேதி நொய்யல் வனம் திட்ட துவக்க விழாவை நடத்தியது.
இந்த திட்டம், நொய்யல் நதிக்கரை ஓரங்களில் தனியார் பங்களிப்பில், தனியார் நிலத்தில் மரக்கன்றுகள் நட்டு வளர்ப்பதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் ஒரு முன்னேற்ற முயற்சியாகும்.











காங்கயம் அருகே நொய்யல் வனம் நிகழ்ச்சியில்

# 14 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு

காங்கயம், அக்.3: காங்கயம் அருகே குட்டப்பாளையம் கிராமத்தில் நொய்யல் வனம் நிகழ்ச்சியில் மரக்கன்று நடும் பணிகளை மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், கலெக்டர் கிறிஸ்துராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இதில், திமுக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேயசிவசேனாபதி வரவேற்று பேசினார். திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் சிறப்புரையாற்றினார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழகத்தின் வனப்பரப்பை அதிகப்படுத்தும் நோக்கில் நடப்பாண்டில் முதற்கட்டமாக 2 கோடியே 80 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை பள்ளி மாணவர்களுடன் 500 உள்ளூர் நாட்டு மரக்கன்றுகளை நட்டு, பசுமை தமிழ்நாடு இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

தற்போது, காலநிலை மாற்றத்தினால் வெப்பத்தின் அளவு அதிகரித்து வருகிறது. வெப்பத்தை குறைக்க வேண்டிய முதல் பணி மரங்களை வளர்க்க வேண்டும். மாநிலத்திட்டக்குழு துணைத்தலைவர் ஜெயரஞ்சன் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் தலைவர் சிவசேனாபதி சாமிநாதன், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பொது மேலாளர் அசோக்குமார், திமுக சுற்றுச்சூழல் மாநில மாவட்ட நிர்வாகிகள், ஊராட்சி தலைவர்கள் பொதுமக்கள் என 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

காங்கயம் அருகே குட்டப்பாளையம் கிராமத்தில் நொய்யல் வனம் நிகழ்ச்சியில் மரக்கன்று நடும் பணிகளை மாநில திட்ட குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.



நதிக்கரையோரம்

# 'நொய்யல் வனம்' திட்டம்

திருப்பூர், அக். 3–

காந்தி ஜெயந்தி விழா வையொட்டி, 'வனத்துக்குள் திருப்பூர்' திட்டம் சார்பில், மூலனூர் மற்றும் குட்டப்பாளையத்தில், மரக்கன்று நடும் விழா நேற்று நடந்தது.

குட்டப்பாளையம், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் மற்றும் வனத்துக்குள் திருப்பூர் திட்டம் சார்பில், நொய்யல் ஆற்றோரம் மரம் வளர்க்கும், 'நொய்யல் வனம்' திட்ட துவக்க விழா நேற்று நடந்தது. கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமை வகித்தார்.

தமிழக அரசின் மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், மேயர் தினேஷ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றனர்.

சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய தலைவர் சிவசேனாபதி சாமிநாதன் முன்னிலை வகித்தார். அயலக தமிழர் நலவாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி வரவேற்றார்.

வெற்றி அமைப்பின் தலைவர் சிவராம், குட்டப்பாளையம் சாமிநாதன் கல்வி மற்றும் அருஞ்செயல் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் அரவிந்த் நல்லதம்பி, தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பொது மேலாளர் அசோக்குமார், திரைப்பட இயக்குனர் ஹமிதா சமீம், ரோஜா முத்தையா ஆய்வு நூலக இயக்குனர் சுந்தர் கணேசன் உள்ளிட்டோர் பேசினர்.

கலாம் கனவு பசுமையாகும் திருப்பூர்

குட்டப்பாளையம், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் மற்றும் 'வனத்துக்குள் திருப்பூர்' திட்டம் சார்பில், நொய்யல் கரையோரம் மரம் வளர்க்கும், 'நொய்யல் வனம்' திட்ட துவக்க விழா நேற்று நடந்தது.

## குளக்கரையோரம் 25 ஆயிரம் மரக்கன்று

ஆறுமுகம் அறக்கட்டளை மற்றும் அனிதா டெக்ஸ்காட் இந்தியா நிறுவனம் மற்றும் 'வனத்துக்குள் திருப்பூர்' திட்டம் சார்பில், மூலனூரை சுற்றியுள்ள, குளக்கரைகளில், 25 ஆயிரம் மரக்கன்று நட்டு வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. அத்திட்ட துவக்க விழா, நேற்று கருடன் கோட்டை பகுதியில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு அனிதா டெக்ஸ்காட் இந்தியா நிறுவனத்தின் நிறுவனர் சந்திரசேகர் தலைமை வகித்தார். வெற்றி அமைப்பு தலைவர் சிவராம் முன்னிலை வகித்தார். கலெக்டர் கிறிஸ்துராஜ், முதல் மரக்கன்றை நட்டு துவக்கி வைத்தார். 35வது பட்டக்காரர் பாலசுப்பிரமணியம் வேணாவுடையார், மூலனூர் ஒன்றிய குழு துணை தலைவர் பழனிசாமி சிறப்பு விருந்தினராக பங்கேற்றனர்.

## குறள் நெறியில் வாழ்க்கை அமையுங்கள்

பாரத அரசாங்கம் வெளியிடும் தபால் முத்திரைகளில் திருவள்ளுவர் படமும் பதித்து வெளியிட வேண்டும். தமிழர்களாகிய நாம் இதை வற்புறுத்த வேண்டும். உலகம் புகழும் ஒரு பெரும் கவிஞர் படம் தபால் தலைகளில் இடம் பெறாதது ஒரு குறைதான். திருவள்ளுவரின் குறள் வேதத்திற்குச் சமமானது. வள்ளுவர் பிறந்தது கி.மு.,வா கி.பி.,யா என்ற சர்ச்சையை ஆராய்ச்சியாளர்களிடம் விட்டு விட்டு, குறள் மூலம் பயன்பெற முயற்சிப்பதே மேல். தமிழ் எழுத்து வடிவில், முதல் எழுத்து, 'அ' கடைசி எழுத்து, 'ன்' வள்ளுவரின் முதல் குறள், 'அ' என்ற எழுத்தில் தொடங்கி, 1330வது குறள், 'ன்' என்ற எழுத்தில் முடிகிறது. குறளில் கூறியபடி நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

– சிவகாசியில் நடந்த திருவள்ளுவர் விழாவுக்கு தலைமையேற்று டி.வி.ஆர்., பேச்சு





பல வருடங்களாக காங்கயத்தில் காங்கயம் காளைக்கு ஒரு சிலை வைக்க வேண்டும் என்று இந்த பகுதி மக்களின் குரலை நாங்கள் அரசிடம் எடுத்துரைத்துவந்துள்ளோம். அதன் ஒரு பகுதியாக, இன்று காங்கயம் ஒன்றியத் தலைவர் திரு மகேஷ் அவர்கள், திருப்பூர் தெற்கு மாவட்ட சுற்றுசூழல் அணியின் மாவட்டப் பொறுப்பாளர் சிவன்மலை திரு ஜவகர் அவர்களும், சிவன்மலை திரு வேலுசாமி ஆகியோரும், கழக சுற்றுசூழல் அணியின் மாநிலச் செயலாளர் அலுவலகத்தில் என்னை சந்தித்து, தங்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் துணை முதலமைச்சர் அவர்களிடமும் பேசி ஒரு சிலை நிறுவ உத்தரவைப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்த காங்கயம் பகுதியின் பாரம்பரிய கால்நடையை வைத்திருக்கக்கூடிய மக்களின் குரலாக, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சென்று, இதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள உறுதி அளித்துள்ளேன்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2026 -தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில், கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்து, ஒவ்வொரு அணியின் செயல்பாடுகளையும் தொடர்ந்து மேற்பார்வையிட்டு வருகின்றார். அதன் ஒரு பகுதியாக, கழகச் சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகளின் பணிகள் குறித்து ஆய்வு செய்யும் நிகழ்வு, நேற்று அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள கலைஞர் அரங்கில் நடைபெற்றது.






19.12.2024 கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், கோவை மாநகர், வடக்கு, தெற்கு மாவட்டக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில், இன்று கோவையில் பங்கேற்றோம். இந்தக் கூட்டத்தில், இயக்கத்தின் எதிர்கால செயல் திட்டங்கள், சுற்றுச்சூழல் நடவடிக்கைகள் மற்றும் மக்களிடையேயான விழிப்புணர்வு முயற்சிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பெரியார் படிப்பக வாசகர் வட்டத்தின் சார்பில், ஈரோடு மாநகர மகளிர் அணி அமைப்பாளர் திருமதி அனிச்சம் கனிமொழி அவர்களின் தலைமையில், ஈரோடு பெரியார் மன்றத்தில் நடைபெற்ற தமிழும் திமிலும் என்ற தலைப்பிலான சிறப்பு கருத்துரை கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினேன். இந்த நிகழ்வில் தமிழ்மொழியின் செல்வாக்கும், சமூக இயக்கங்களில் அதன் பங்களிப்பும் குறித்து மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.





திருப்பூர் மாநகராட்சி மற்றும் நொய்யல் பண்பாட்டு அமைப்பு இணைந்து நொய்யல் நதிக்கரையில் நடத்திய திருப்பூர் பொங்கல் திருவிழாவில் கலந்து கொண்ட வள்ளி கும்மியாட்டக் குழுவினர், குழந்தைகள் மற்றும் பெரியோர்கள், திராவிட முன்னேற்றக் கழக சுற்றுச்சூழல் அணியின் மாநிலச் செயலாளர் அலுவலகத்தில் என்னை சந்தித்தனர். கொங்கு நாட்டு பாரம்பரிய கலையாக வள்ளி கும்மியை பாதுகாத்து வரும் அந்தக் கலைஞர்களை நேரில் பாராட்டி வாழ்த்தினேன். மேலும், திராவிட இயக்கம் எவ்வாறு மக்கள் கலைகளை ஊக்குவித்து வளர்ச்சியடையச் செய்கிறது என்பதை அவர்கள் உடனும் பகிர்ந்து கொண்டேன்.









காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கங்களை தொடர்ந்து மாநிலத்தின் நிர்வாகிகள் வழியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என முன்பே அறிவுறுத்தியிருந்தோம். அந்த அறிவுறுத்தலின் ஒரு தொடராக, திருவள்ளூர் மண்டலத்தின் ஏற்பாட்டில், சென்னை சைதாப்பேட்டையில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியில் காலநிலை மாற்றத்தைப் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று, சுற்றுச்சூழலையும், இயற்கையைச் சார்ந்த வாழ்வியலையும் பாதுகாக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உரையாற்றினேன்.












சென்னை அறிவாலயத்தில் அமைந்துள்ள கலைஞர் அரங்கில், சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நடைபெறினது. இந்த நிகழ்வில் 4,000-க்கும் மேற்பட்ட உற்சாகம் மிக்கவர்கள் கலந்துகொண்டு, திராவிட இயக்கத்தின் சுற்றுச்சூழல் நோக்குகளுக்கான தங்களது ஆர்வத்தையும் பங்களிப்பையும் வெளிப்படுத்தினர்.





ஈரோடு கிழக்குச் சட்டமன்ற தொகுதி
ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் காங்கிரஸ் வேட்பாளர்
திரு.ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் அவர்களுக்கு கை சின்னத்தில்
வாக்குகள் சேகரிக்கும் சுற்றுபயண விவரம்

**திருமிகு.கார்த்திகேய சேனாபதி** அவர்கள் மாநில
சுற்றுசூழல் அணி செயலாளர்

| நாள் | இடம் |
|---|---|
| 14.02.2023 செவ்வாய் | 1.குமலான் குட்டை<br>2.இடையன்காட்டு வலசு<br>3.கருங்கல்பாளையம் (காந்தி சிலை)<br>4.ரயில் நிலையம்(டீசல் செட்) |

ஈரோடு கிழக்குச் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலையொட்டி, ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் சார்பாக காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கு ஆதரவாக, கை சின்னத்தில் வாக்குகள் சேகரிக்க தொகுதியின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுப்பயணத்தில் பங்கேற்று மக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொண்டேன்.









மாலை மலர் சென்னை 22–2–2023



சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி மற்றும் பசுமை வேளச்சேரி அமைப்பும் இணைந்து அண்ணா நினைவு நாளை முன்னிட்டு 20 ஆயிரம் மரக்கன்றுகளை நட இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன்படி மாவட்ட சுற்றுச்சூழல் நிர்வாகி மடிப்பாக்கம் சாம் நவீன் ஏற்பாட்டில் வேளச்சேரியில் ரெயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் சுற்றுச்சூழல் அணியின் மாநில செயலாளரும் அயலக தமிழர் நலவாரிய தலைவருமான கார்த்திகேய சிவசேனாபதி 20,000–மாவது மரக்கன்றை நட்டார். இதில் சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் பழ.செல்வகுமார், சென்னை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர் ராமாபுரம் ராஜேஷ் மற்றும் அணி நிர்வாகிகள் அறிவுடை நம்பி, தீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.






பசுமை வேளச்சேரி அமைப்பும், திராவிட முன்னேற்றக் கழக சுற்றுச்சூழல் அணியும் இணைந்து, அறிஞர் அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு கடந்த மூன்றாம் தேதியில் இருந்து மர நடவு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக, 20,000 மரக்கன்றுகளை நடுவது இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கை நோக்கி முன்னேறும் முயற்சியின் ஆரம்ப கட்டமாக, வேளச்சேரி ஒன்றியத்தில் உள்ள ரயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் முதல் கட்ட மர நடவு வேலை ஆரம்பிக்கப்பட்டது.




திமுக சுற்றுச்சூழல் அணி மற்றும் ஏவிபி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் சுற்றுச்சூழல் சங்கம் இணைந்து நேற்று திருப்பூர் காந்தி நகரில் உள்ள ஏவிபி பள்ளியின் கலையரங்கத்தில், தமிழக முதல்வரின் 33 சதவீத பசுமை பரப்பு அதிகரித்தல் மற்றும் காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கத்தை நடத்தினர். அதில் கலந்து கொண்டு, தலைவர் அவர்களின் 33% பசுமை பரப்பு அதிகரித்தல் திட்டத்திற்கு மாணவர்கள் எப்படி உதவலாம் என்று சிறப்புரை ஆற்றினேன்.




ஆங்கிலத்தில் ஜல்லிக்கட்டை பற்றி ஆவணப்படுத்தும் நோக்கில் அறிவியல் மற்றும் தொன்மையான பல விவரங்களை தொகுத்து அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி எழுதிய "Thunderous Run Bountiful Harvest - Bull Scapes of Tamil Geography" என்ற புத்தகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.3.2023) வெளியிட ஜல்லிக்கட்டு வீரர்கள் பெற்றுக் கொண்டனர். உடன் தமிழ்நாடு அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளனர்.

ஏறு தழுவுதல் (ஜல்லிக்கட்டு) குறித்து வரலாற்று தரவுகளை ஆவணப்படுத்தும் நோக்கில் "Thunderous Run Bountiful Harvest" என்ற ஆங்கிலப் புத்தகத்தை தமிழர் காவலர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அவர்கள் நேற்று வெளியிட, தமிழக ஏறுதழுவல் (ஜல்லிக்கட்டு) மாடுபிடி வீரர்கள் பெற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வில் மாண்புமிகு பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் மாண்புமிகு மூர்த்தி அவர்களும், ஏறுதழுவல் (ஜல்லிக்கட்டு) மாடுபிடி வீரர்கள், சூழலியல் அறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.














ஐக்கிய நாடுகள் சபையின் 2023 நீரியல் மாநாடு
மார்ச் 22-24, 2023, நியூயார்க்கில்
நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டேன்




திமுக சுற்றுச்சூழல் அணியின் சார்பாக பள்ளி மாணவர்களுக்கான தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் போட்டி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு தமிழ்மொழி, பண்பாடு மற்றும் மரபுகளை மாணவர்களிடையே ஊக்குவிப்பதற்காகவும், தமிழின் பெருமையை உணர்த்தும் நோக்கத்துடன் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.














தமிழ் தாய் பள்ளி - நிறுவனர் அவர்களுடன், தாய் மொழி கல்வி மற்றும் அதனுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பை எவ்வாறு பள்ளி மனவர்களிடேயே கொண்டு செல்வது என்ற கலந்துரையாடலின் போது





...த்தை நடத்தினார்.

# எல்.பி.பி., வாய்க்காலுக்கு கான்கிரீட் திட்டம் வேண்டாம்; கடைகோடி விவசாயிகள் எதிர்ப்பு

காங்கேயம், ஏப். 27-

